வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=




# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com   மலர் : 06   20.05.2025 செவ்வாய்க்கிழமை   இதழ் : 141   பக்கங்கள் : 12

# இலங்கையில் இடம்பெற்றது இனஅழிப்பு நடவடிக்கையே!

## யுத்த குற்றங்களை ஒருபோதும் மறக்கக்கூடாது என்கிறார் கனடா கொன்சவேர்ட்டிவ் தலைவர்

ஒட்டாவா, மே 19

**இலங்கையில் இடம்பெற்றது படுகொலைகள் மாத்திரமல்ல, இன அழிப்பு என தெரிவித்துள்ள கனடாவின் கொன்சவேர்ட்டிவ் கட்சி தலைவர் பியர் பொலியியர், ராஜபக்ஷ அரசாங்கத்தின் யுத்த குற்றங்களை ஒருபோதும் மறக்கக்கூடாது. அந்த குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தண்டனையின்றி தப்ப அனுமதிக்கக்கூடாது எனத் தெரிவித்துள்ளார்**



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்ட அறிக்கையில் இதனை தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-

வரலாற்றை திரும்பிப் பார்க்கும் அனைவரும் பெருமிதமான தருணங்களையும் வலிமிகுந்த தருணங்களையும் நினைவு கூருவார்கள்.

தமிழ் இனப்படுகொலை நினைவு நாளில் கடந்த நூற்றாண்டின் மிகப்பெரிய துயரங்களில் ஒன்றான தமிழ் இனப்படுகொலை குறித்து எங்கள் எண்ணங்களை திருப்புகின்றோம்.

பல தசாப்தங்களாக இலங்கை வன்முறையாலும்

11



## சஜித் தரப்பு - ஐ.தே.க. இடையே நேற்று எட்டப்பட்டது உடன்பாடு!

கொழும்பு, மே 20

2025 உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை நிறுவுவது குறித்து எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன நேற்று கலந்துரையாடல்களை நடத்தியுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பான கொள்கைகள் குறித்து சிறப்பு விவாதம் நடத்தப்பட்டதாக ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளின்

11

## இலங்கையின் பொறுப்புக்கூறல் முயற்சிக்கு தொடர்ந்தும் ஆதரவு

### கனடா பிரதமர் மார்க் கார்னி அறிக்கை

ஒட்டாவா, மே 20

இலங்கையில் பொறுப்புக்கூறலுக்கும், உண்மை, நீதி ஆகியவற்றை அடைவதற்கும் எடுக்கப்படும் சுதந்திரமான சர்வதேச முயற்சிகளைக் கனடா தொடர்ந்தும் ஆதரிக்கிறது என கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஆயுதப்போர் முடிவடைந்து 16 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில்

11



## இலங்கையின் ஆட்சியாளர்கள் படையினரை கைவிட்டுள்ளனர்

### சவேந்திர சில்வா கடும் விசனம்

கொழும்பு, மே 20

2009ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையை ஆண்ட ஆட்சியாளர்கள் ஆதாரமற்ற யுத்தக் குற்றச் சாட்டுக்களை எதிர்கொள்வதில் தோல்வியடைந்துள்ளனர் என இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு படை பிரதானியும், இராணுவத் தளபதியும், இறுதி யுத்தத்தில் 58 ஆவது படைப் பிரிவின் தளபதியாக பணியாற்றியருவமான ஜெனரல்

11



## நல்லூரில் அசைவ உணவகம்: எதிர்த்து இன்று கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், மே 20

நல்லூரானது சைவ சமயத்தின் புனிதத் தலமாகும். இத்தகைய தலத்துக்கு அருகில் அசைவ உணவகம் அமைக்கப்படுவது மதசாந்தி, கலாசாரம் மற்றும் பாரம்பரியத்துக்கு எதிரானது என்பதை வெளிப்படுத்தும் முகமாக இன்று கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே, அனைத்து நல்லூர் கந்தன் பக்தர்களும் ஒன்றுகூடி, இந்த அசைவ உணவகத்துக்கு

11

## நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து புதிய போராட்டத்தை ஆரம்பிப்போம்

### ஜனாதிபதி அநுரகுமார அழைப்பு

கொழும்பு, மே. 20

“இந்த தாய் நாட்டை நாம் நேசிக்கிறோம். உலகில் சிறந்த நாடாக மாற்ற சமாதானமும் நல்லிணக்கமும் அவசியம். அதற்கான அனைத்து முடிவுகளையும் தைரியமாக எடுக்க வேண்டும். படையினர் காட்டிய அர்ப்பணிப்பு, தியாகம் மற்றும் தைரியம் என்பன இந்த நாட்டைக்

11



## மழை, மின்னல் தாக்கத்தினால் யாழில் 17 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், மே 20

நிலவும் அசாதாரண காலநிலை காரணமாக ஏற்பட்ட மழை மற்றும் மின்னல் தாக்கத்தினால் யாழ்ப்பாணத்தில் 17 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி. என். சூரியராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மழை அனர்த்தத்தால் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/03 கிராம சேவகர்

11

## அகதிகளுக்கு இடமளிக்க இந்தியா தர்மசாலையல்ல!

### இலங்கை அகதியின் கோரிக்கையை நிராகரித்தது உச்ச நீதிமன்றம்

சென்னை, மே 20

‘140 கோடி மக்கள் தொகையுடன் ஏற்கனவே போராடிவரும் நிலையில், உலகம் முழுவதும் உள்ள அகதிகளுக்கு இடமளிக்க இந்தியா ஒன்றும் தர்மசாலை (இலவச தங்குமிடம்) அல்ல’ என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

11

## தேசியக் கட்சிக்கு இடம்கொடுக்காமல் தமிழ்த் தரப்புகள் ஆள்வதே அவசியம்!

### வலியுறுத்துகிறார் சீ.வீ.கே.சிவஞானம்

யாழ்ப்பாணம்,மே. 20

தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் கட்சிகள் ஓரணியில் நின்று, தேசியக் கட்சிக்கு இடங்கொடுக்காத வகையில் ஆட்சி அதிகாரத்தை தமிழ்த் தரப்பினர் கையகப்படுத்த வேண்டும் என தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண சபை அவைத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# நாட்டைக் காட்டிக்கொடுக்கும் செயல்பாடுகளில் அநுர அரசு!

## குற்றம்சாட்டுகிறார் சரத் வீரசேகர

கொழும்பு, மே 20

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கருத்துகளை தெரிவிப்பதன் ஊடாக நாட்டைக் காட்டிக்கொடுக்கும் செயற்பாட்டை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்நாட்டில் யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஜெனிவாவில் வெளியக பொறிமுறையொன்று இயக்கப்படுகிறது.

அதற்காக புலம்பெயர் நாடு களில் இயங்கும் விடுதலைப் புலிகள் அமைப்புகள் உள்ளிட டவை ஆதரவு வழங்குகின்றன.

இந்நிலையில் புதிய அரசிய லமைப்பின் ஊடாக அதிகாரப் பரவலாக்கத்தை வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஒற்றையாட்சி யைத் தவிர வேறு ஏதேனும் முறைமைகள் குறித்து ஆராயும் பட்சத்தில் அது பிரிவினை வாதிகளுக்கே சாதகமாக அமையும்.

மேலும், பட்டலந்தவில் சிங்கள மக்களை துன்புறுத்தியவர்கள் தமிழர்களை எவ்வாறு துன்புறுத்தியிருப்பார்கள் என்பது போன்ற கருத்தை அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.



அவ்வாறாயின் நாம் தமிழர்களிடம் முறையற்ற விதத்தில் நடந்துகொண்டதாக அவர் ஒப்புக்கொள்கிறார் போலும். அவ்வாறான மனித உரிமை மீறல்கள் எதுவும் நடைபெறவில்லை. நாம் இரண்டு இலட்சத்து 95 ஆயிரம் பேரை இறுதிக்கட்ட யுத்தத்தின்போது மனிதாபிமான அடிப்படையில் காப்பாற்றியுள்ளோம் - என்றார். (அ)



# ஆனையிறவு உப்பளத்தின் ஊழியர் தொடர் போராட்டம்

கிளிநொச்சி, மே. 20

ஆனையிறவு உப்பள ஊழியர்களின் போராட்டம் ஏழாவது நாளாக நேற்று தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

குறித்த உப்பளத்தில் கடந்த ஒன்பது வருடங்களுக்கு மேலாக பணியாற்றும் தற்காலிக, பருவ கால ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் இங்கு உற்பத்தியாகும் உப்பை ஆனையிறவில் பொதி செய்து விநியோகிக்குமாறும், தற்போதைய முகாமையாளரை இடமாற்றக் கோரியும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை கடந்த 14 ஆம் திகதி முதல் ஆனையிறவு உப்பளத்தின் முன்பாக முன்னெடுத்துள்ளனர்.

குறித்த கவனயீர்ப்பு போராட்டம் நேற்றும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. (அ)

# அதிகாரத்துக்காக திருடர்களுடன் இணைய முற்படுகின்றார் அநுர!

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, மே. 20

அதிகாரத்துக்காக திருடர்களுடனும் இணைய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தயாரகவிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சிமன்ற தேர்தல் மேடைகளில், திருடர்களுடன் ஆட்சியமைக்கப்போவதில்லை என ஜனாதிபதி கூக்குரலிட்டார்.

ஆனால் ஆட்சியமைப்பதற்காக எதிர்க்கட்சியை சார்ந்த பலரின் உதவியை ஜனாதிபதி நாடி வருகிறார்.

இதற்காக தமது அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் பாராளுன்ற உறுப்பினர்களைக் களத்தில் ஜனாதிபதி இறக்கியுள்ளார.

அதேநேரம் கொழும்பு நகர சபையின் ஆட்சியை கைப்பற்றுவதற்காக வெற்றி பெற்ற சுயேச்சைக் குழு உறுப்பினர்களை ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்து கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகிறார்.

புதிய அரசியல் கலாசாரத்தை தோற்றுவிப்பதற்காக பிரவேசித்த கட்சி இன்று என்ன செய்கிறது?

பல வர்த்தகப் பிரமுகர்ளை இத்தகைய செயற்பாடுகளுக்காக அரசாங்கம் ஈடுபடுத்துகின்றது.

இதுதவிர ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் உள்ளூராட்சி மன்றங்களுக்காக பிரவேசித்துள்ளவர்களையும் அவர்கள் சந்தித்துள்ளனர் - என்றார். (அ)

# கண்டாவளைப் பிரதேச மக்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டம்

## வீதி புனரமைக்கப்படாதமையை கண்டித்து

கிளிநொச்சி, மே. 20

கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட கல்மடு நகர் ரங்கன் குடியிருப்பு பிரதான வீதியை புனரமைத்துத் தருவதாக வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என தெரிவித்து பிரதேச மக்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டம் நேற்று கண்டாவளை பிரதேச செயலகம் முன்பாக இடம்பெற்றது.

மேற்குறித்த பகுதியில் 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் இக்கிராமத்துக்கான பிரதான வீதி மற்றும் சேதமடைந்த பாலம் என்பவற்றை புனரமைத்து தருமாறு தொடர்ச்சியாக விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு காலத்துக்கு காலம்



வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதும் அந்த வீதிகள் இதுவரை புனரமைக்கப்படவில்லை.

இதனால் குறித்த பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், கர்ப்பவதிகள் என பலரும் பல்வேறு அசௌகரிகளுக்கு மத்தியில் போக்குவரத்துக்களை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டனர்.

குறித்த பிரதேசத்துக்கு பாடசாலை பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டபோதும் வீதி சீரின்மையால் அது இடம்பெறுவதில்லை எனவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக நேற்று கண்டாவளைப் பிரதேச செயலாளரை பாதிக்கப்பட்ட மக்கள் நேரில் சென்று வினவிய போது, வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கு இது குறித்து ஏற்கனவே தெரிவித்துள்ளதாகவும் மக்களின் போராட்டம் தொடர்பாகவும் தெரியப்படுத்தியுள்ளதாகவும் கூறினார். (அ)

# கொட்டாஞ்சேனை மாணவி உயிர் மாய்ப்பு; முழுமையான அறிக்கை சமர்பிக்க பணிப்பு

## ஜூன் 23 மீண்டும் விசாரணை

கொழும்பு, மே. 20

கொழும்பில் உள்ள பிரபல பாடாசலை ஒன்றில் கல்வி கற்ற 16 வயதான பாடசாலை மாணவி அம்சி, தற்கொலை செய்து கொண்ட சம்பவம் தொடர்பாக தொடர்ந்து முழுமையான விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அத்துடன் ஜூன் மாதம் 23 ஆம் திகதி அடுத்த கட்ட விசாரணை நடபெறும் என்றும், மேலதிக நீதிபதி பசன் அமரசேன தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மாணவியின் மரணத்திற்கு நீதி கோரி நீதிமன்றம் முன்பாக அமைதிப் போராட்டம் ஒன்றும் நேற்று காலை இடம்பெற்றது.

குற்றவாளிகளை காப்பாற்ற வேண்டாம் எனவும், நீதி கிடைக்க வேண்டும் என்றும் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை கைகளில் ஏந்தியவாறு, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமைதியாக குரல் எழுப்பினர்.

பாலியல் துஷ்பிரயோகத்தில் சம்பந்தப்பட்ட ஆசிரியர் மற்றும் தனியார் கல்வி நிலைய பணிப்பாளர் கைது செய்யப்படவேண்டும் என்றும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

சிவில் சமூக பொது அமைப்புகள் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன. உயிரிழந்த மாணவியின் சார்பில் பிரபலமான நான்கு சட்டத்தரணிகள் முன்லையாகியிருந்தனர். (அ)

# ஒருவருக்கு ஒரு நாள் 7 கிராம் உப்பு போதும்!

கொழும்பு, மே. 20

ஒருவருக்கு நாளொன்றுக்கு ஏழு கிராம் உப்பு போதுமானது என அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நாளொன்றுக்கு 500 மெற்றிக் தொன் எடையுடைய உப்பு தேவைப்படுவதாகத் அவர் கூறினார்.

எனவே இலங்கை, நாளொன்றுக்கு தேவையான 500 மெற்றிக் தொன் எடையுடைய உப்பை விநியோகம் செய்ய முடியாத நாடு அல்ல என அவர் குறிப்பிட்டார்.

எனினும் நாட்டில் தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக உப்பு உற்பத்தி வீழ்ச்சியடைந்ததாகவும் இதனால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக உப்பினை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது என அவர் குறிப்பிட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
20.05.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 06

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# எந்த சர்வதேசத்திடம் நீதி கோருகின்றீர்கள்?

முள்ளிவாய்க்கால் நினைவு கூரலின் போது பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக வெளிப்பட்ட ஒரு விடயம், சர்வதேசமே எங்களுக்கு நீதியை பெற்றுத் தா! இவ்வாறு கோரும் மக்களின் உணர்வுகளை நாம் புரிந்து கொள்ளத்தான் வேண்டும். ஆனால், அவர்கள் எந்த சர்வதேசத்திடம் நீதியை கோருகின்றனர் என்பதை அவர்கள் அறியாமல் இருக்கலாம். ஏனெனில் அவர்கள் உணர்வின் வழியாக வழிநடத்தப்படுகின்றனர். உணர்வின் வழியாக உலகை பார்ப்பவர்கள், இந்த உலகை விட்டால் எங்களுக்கு வேறு என்னதான், வழியென்றுதான் சிந்திப்பார்கள் - அது ஒரு பக்தன் கடவுள் மீது வைக்கும் நம்பிக்கைக்கு ஒப்பானது.

பக்கதர்கள் கடவுளை கண்டதில்லை, கடவுள் எவ்வாறு அருள் பாலிப்பார் என்பதையும் அவர்கள் அறியார். ஆனால் கடவுளை மன்றாடினால் - அவர், தங்களுக்காக இறங்கிவருவார், அற்புதங்கள் செய்வார் என்று பக்தர்கள் நம்புகின்றனர். அவர்கள் தங்களின் நம்பிக்கை மீது எப்போதுமே சந்தேகம் கொள்வதில்லை. ஒரு வேளை அப்படிச் சந்தேகம் கொள்ள நேர்ந்தால், கடவுள் இருக்கின்றாரா? அவர் உண்மையிலேயே துன்பத்திலிருக்கும் மாந்தரை கரைசேர்ப்பாரா? என்னும் ஆராய்ச்சிக்குள் மனம் சென்றுவிடும். பக்தர்களின் நம்பிக்கையின் உறுதிதான் கடவுள்.

2009 முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் நம்பிக்கைகள் என்பது, கடவுள் மீது, பக்தன் கொண்டிருக்கும் நம்பிக்கை போன்ற ஒன்றாகவே தொடர்கின்றது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தம் என்பது மகிந்த ராஜபக்ஷக்கள் தனியாக செய்து முடிந்த சாதனை அல்ல. அல் கைடாவின் அமெரிக்க இரட்டைக் கோபுர தாக்குதலுக்கு பின்னர் ஏற்பட்ட புதிய உலக ஒழுங்கில், உலகின் ஆதரவுடன் முடித்து வைக்கப்பட்ட ஒரு போர். அந்தப் போரின் விளைவுதான் முள்ளிவாய்க்கால். எவர் யுத்தத்தை முடிக்க உதவினார்களோ அவர்கள்தான் சர்வதேசம். அந்த சர்வதேசத்திடம் தான் இப்போது நாம் நீதியை கோருகின்றோம்.

ஈழநாடு முன்னைய தலையங்கங்களிலும் ஒரு விடயத்தை வலியுறுத்தியிருக்கின்றது அதாவது, இந்த உலக அரசியல் இயங்குநிலை என்பது நலன்களால் வழிநடத்தப்படுவதாகும், தங்களுக்கான நலன்களை நிறுத்துப் பார்த்துத்தான், ஒவ்வொருவரும் மற்றவர்களின் விடயங்கள் மீது தலையீடு செய்வார்கள்.

இதனை புரிந்து கொள்ளாமல் வெறுமனே கருணை மனுக்களை முன்வைப்பதால் உலகை திருப்பிப் பார்க்க வைக்க முடியுமென்று சாதாரண மக்கள் நினைக்கலாம். ஏனெனில், அவர்கள் உலக ஒழுங்கின் அசைவு அறியாதவர்கள், அவர்களால் ஒருபோதும் அரசியல் சூட்சுமங்களை புரிந்து கொள்ளவேமுடியாது - அதனால்தான் அவர்கள் சாதாரண மக்கள், ஒவ்வொரு தேர்தலிலும் வாக்களித்துவிட்டு, அரசியல்வாதிகளை திட்டிக் கொண்டிருப்பவர்கள். ஆனால், மக்களை வழிநடத்துவதாகக் கூறிக்கொள்ளும், தேசத்தை திரட்டுவதாக கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசிய அரசியலாளர்கள், அறிவுஜீவிகள் சாதாரண மக்கள் போன்று சிந்திப்பதுதான் பிரச்னையானது.

இன்றைய உலக அரசியல் சூழல் தொடர்ந்தும் பதற்றமடைந்து வருகின்றது. இந்தப் பதற்ற நிலையானது, பிராந்தியங்களின் பாதுகாப்பு கரிசனைகளை தீவிரப்படுத்தியிருக்கின்றது. அதிகம் அதிகாரங்களை ஓரிடத்தில் குவிப்பதை ஆதரிக்கும் போக்கு அதிகரித்து வருகின்றது. சீனாவின் எழுச்சியால் மேற்குலகின் மனித உரிமைசார் கரிசனைகள் வீழ்ச்சியடைந்து செல்கின்றது. இவைகள் ஒரு வகையில் இலங்கை அரசுக்கு சாதகமான அரசியல் சூழலாகவும் மாறியிருக்கின்றன. இந்த நிலையில், புதிய அரசியல் சூழலைப் புரிந்துகொண்டு, அதற்கேற்ப அரசியலை ஒழுங்குபடுத்திக் கொண்டால்தான், தமிழர் அரசியல் முன்னோக்கி பயணிக்க முடியும்.

அடிப்படையான விடயம் என்னவென்றால், இப்போது உலகம் ஒரு சர்வதேசமாக இல்லை என்பதுதான். சர்வதேசம் பிளவுற்றிருப்பதால், நிலைப்பாடுகள் சார்ந்தும் பிளவுகள் மேலாதிக்கம் பெற்றிருக்கின்றன. இதற்குள் தப்பிக் கொள்வதற்கான வாய்ப்பு அரசுகளுக்கு ஏராளம். ஆனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கோ வழிகள் இல்லை.





# தாளையடியில் இருந்து நேற்று முதல் கரவெட்டிக்கு நீர்விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே. 20

வடமராட்சி கிழக்கு தாளையடி நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து கரவெட்டிக்கு நீர் விநியோகம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கரவெட்டி மத்தொனி தாழங்குழியில் அமைக்கப்பட்ட நீர்தாங்கி யில் இருந்து நீர் வழங்கும் செயற்பாடு நேற்றுக் காலை 8.30 மணிக்கு சமய நிகழ்வுடன் ஆரம்பானது.

நிகழ்வில் பிராந்திய பொறியியலாளர் உதயசீலன், யாழ். மாவட்ட பொறுப்பதிகாரி யசோதரன், பருத்தித்துறை நீர் வழங்கல் சபை பொறுப்பாளர் மதிவாணன், கரவெட்டி அபிவிருத்தி ஒன்றிய தலைவர் இராகவன், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு நீர் விநியோக செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தனர்.

யாழ்ப்பாணம் - தாளையடி கடல் நீர் சுத்திகரிப்பு நிலையம் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 02ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதி ஏற்பாடுகளின் கீழ் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு அமைச்சு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர்வழங்கல் வேலைத்திட்டத்தின் கீழ் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

இந்த கடல் நீர் சுத்திகரிப்பு நிலையம் 266 மில்லியன் டொலர்கள் செலவில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# நாட்டில் உப்புத் தட்டுப்பாட்டால் பேக்கரி தொழிற்துறை பாதிப்பு

கொழும்பு, மே. 20

நாட்டில் நிலவி வரும் உப்பு தட்டுப்பாடு பேக்கரி உற்பத்திகளை பாதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஹோட்டல் கைத்தொழிற்துறையைச் சேர்ந்தவர்களுக்கும் பேக்கரி உற்பத்தியாளர்களுக்கும் உப்பு பற்றாக்குறை பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உப்பு கொள்வனவு செய்வதற்காக நேரத்தை செலவிட நேரிட்டுள்ளதாக பேக்கரி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.

பல்பொருள் அங்காடிகளுக்கு பணியாளர்களை அனுப்பி நேரத்தை விரயம் செய்து உப்பு கொள்வனவு செய்ய நேரிட்டுள்ளதாக அவர் கூறினார்.

பெரியளவிலான பேக்கரி உற்பத்தியாளர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 200 கிலோ கிராம் எடையுடைய உப்பு தேவைப்படுவதாகத் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# மின்னல் குறித்து எச்சரிக்கை

கொழும்பு, மே. 20

நாட்டின் பல மாகாணங்களில் கடுமையான மின்னல் ஏற்படுவதற்கான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் பல இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும்போது மின்னல் தாக்கம் ஏற்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**இடபம்**

கணவன்- மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். புது முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**மிதுனம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். எளிதில் யாரையும் நம்பி ஏமாறாதீர்கள். சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம்.

**கடகம்**

சகோதர வகையில் நன்மை உண்டு. விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**சிம்மம்**

குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**கன்னி**

வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். சிக்கனமாக செலவழிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

**துலாம்**

கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் பிரச்னை தீரும். சூழ்ச்சிகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

**விருட்சிகம்**

குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**தனுசு**

குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு கூடும். மேலதிகாரி ஒத்துழைப்பார். மகிழ்ச்சி தொடங்கும் நாள்.

**மகரம்**

ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் வந்து நீங்கும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**கும்பம்**

அனாவசிய செலவுகளை குறைக்கப் பாருங்கள். குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**மீனம்**

எதார்த்தமாக பேசிக் கவர்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர் ஆவர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

# தங்குமிடத்தில் யுவதி குளிப்பதை காணொலி எடுத்தவர் கைதானார்

யாழ்ப்பாணம், மே 20

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் தங்குமிடம் ஒன்றில் யுவதி ஒருவர் குளிப்பதை இரகசியமாக காணொலி எடுத்த தங்குமிட நிர்வாகி பொலிஸாரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கோண்டாவில் பகுதியில் உள்ள தனியார் தங்குமிடத்தில், வெளிமாவட்டத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்று நேற்று முன்தினம் தங்கியிருந்தனர்.

அந்தக் குடும்பத்தை சேர்ந்த யுவதி ஒருவர் குளியலறையில் குளித்துக்கொண்டிருந்த வேளை, தங்குமிட நிர்வாகி குளியறையின் மேல்பக்கம் உள்ள துவாரம் ஒன்றின் ஊடாக தனது தொலைபேசியில் காணொலி எடுத்துள்ளார்.

அதனை அவதானித்த யுவதி தனது குடும்பத்தினருக்கு சம்பவம் தொடர்பில் கூறியதுடன், கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், தங்குமிட நிர்வாகியை கைது செய்து, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்தி, அவரது தொலைபேசிகளை சோதனை மேற்கொண்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்த நீதிமன்றின் அனுமதியை பெறவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

குறித்த நபர், கடந்த சில வருடங்களுக்கு முன்னர் யாழ். நகர்ப் பகுதியில் உள்ள பிரபல விடுதி ஒன்றில் கடமையாற்றி வந்த வேளை அங்கும் அறை ஒன்றில் இரகசிய கமரா பொருத்தினார் என சர்ச்சையில் சிக்கியிருந்தது டன், தங்குமிடத்தக்கு வரும் பெண்களுடனும் தவறாக நடக்க முற்பட்ட குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில், அங்கிருந்து வெளியேறி, கோண்டாவில் பகுதியில் உள்ள தங்குமிடம் ஒன்றை பொறுப்பெடுத்து நிர்வகித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

### தேசிய மட்டத்தில் சிறந்த விவாதப்போட்டி

# பாடசாலையை தெரிவு செய்வதற்கான மாகாண மட்ட விவாதப்போட்டி யாழில்

யாழ்ப்பாணம், மே 20

தேசிய மட்டத்தில் சிறந்த விவாதப்போட்டி பாடசாலையை தெரிவு செய்வதற்கான மாகாண மட்ட விவாதப்போட்டி கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மாகாணப் பணிப்பாளர் சி. சிவகெங்காதரன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக திறன் விருத்தி பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

கல்வி அமைச்சு, கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு என்பனவற்றின் வழிகாட்டலில் கைத்தொழில் அபிவிருத்தி சபையால் மாணவர்ளை இணைத்து "தொழில் முயற்சியாண்மை வட்டம்" என்ற குழுவை அமைத்து பாடசாலை மட்டத்தில் தொழில் முயற்சியாண்மை விருத்தி செய்யும் நடவடிக்கை நாடளாவிய ரீதியில் நடைபெற்று வருகிறது.

இதன் ஒரு கட்டமாக தொழில் முயற்சியா ண்மை தொடர்பான விவாதப் போட்டி பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வருகிறது.

கடந்த வருடம் மாவட்ட ரீதியான போட்டிகள் இடம் பெற்று அதில் சிறந்த பாடசாலைகள் இம்மாகாண மட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டன.

இம்மாகாண மட்ட போட்டிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து 5 பாடசாலைகளும், கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 2 பாடசாலைகளும், மன்னார் மாவட்டத்திலிருந்து 3 பாடசாலைகளும், வவுனியா மாவட்டத்திலிருந்து 2 பாடசாலைகளும் ஆக 12 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன.

இதில் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மாவட்ட பிரதிப்பணிப்பாளர், வடமாகாண கல்வி வலய உதவிப்பணிப்பாளர், வங்கி உத்தியோகத்தர், சிறந்த தொழில் முயற்சியாளர், தொழில் முயற்சியாளர்களுக்கு சேவை வழங்கும் உத்தியோகத்தர், ஆசிரியர்கள், மாணவர்கள் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)





யாழ்ப்பாணம், மாதகலைச் சேர்ந்த விசுவநாதர் சிற்றம்பலத்தின் சமூக சேவைகளைப் பாராட்டி மதிப்பளித்து அவரின் வாழ்நாள் சாதனைகளை வாழும்போதே வாழ்த்தும் கௌரவிப்பு விழாவும் நூல் வெளியீடும் மாதகல் இளைஞர் சங்க கலையரங்கத்தில் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் கலந்து கொண்டார்.

# நகையை தொலைத்த பெண்ணை தேடிக் கண்டுபிடித்து கையளிப்பு!

### நகைக்கடை உரிமையாளரின் மனிதாபிமான செயல்

யாழ்ப்பாணம், மே 20

யாழில் 23 பவுண் தங்க நகையை தொலைத்த பெண்ணை தேடிக் கண்டுபிடித்து, அவரிடமே ஒப்படைத்து நகைக்கடை உரிமையாளர் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளார்.

யாழில் பேருந்தில் பயணித்த பெண் ஒருவர் கடந்த மாதம் 09ஆம் திகதி தனது தங்க நகையை தவறவிட்டுள்ளார்.

இந்த நிலையில் இது குறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

பின்னர் குறித்த நகையை கண்டெடுத்தவர் அதனை நகைக் கடையில் கொடுத்து வேறு நகை செய்வதற்கு முயற்சித்துள்ளார். இதன்போது நடந்த சம்பவத்தையும் நகைக்கடை உரிமையாளரிடம் கூறியுள்ளார்.

இதன்போது நகைக்கடை உரிமையாளர் இது தவறு என அவருக்கு எடுத்துக்கூறிய பின்னர், நகை காணாமல் போனதாக ஏதாவது பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதா? எனத் தேடுதலில் ஈடுபட்டுள்ளார்.

இந்த நிலையில், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டமை தெரியவந்தது.

தங்க நகையை தொலைத்த பெண்ணை அழைத்த நகைக் கடை உரிமையாளர், மதகுரு ஒருவருக்கு முன்பாக வைத்து அந்த நகையை கடந்த 16 ஆம் திகதி கையளித்துள்ளார்.

நகையை தொலைத்த பெண்ணிடமே மீண்டும் நகையை வழங்கிய சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த குறித்த நகைக்கடை உரிமையாளரை பலரும் பாராட்டி வருகின்றனர். (எ-05)

# புலம்பெயர் தமிழர் தேவைக்கு ஏற்பவே செயற்படுகிறது அரசு!

## சீலரத்ன தேரர் குற்றச்சாட்டு



கொழும்பு, மே. 20

புலம்பெயர் தமிழர்களின் தேவைக்கு ஏற்பவே அரசாங்கம் செயற்படுவதாக ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காகவே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை வழங்கினார்கள். எத்தனையோ சிங்கள இளைஞர்களை விடுதலைப் புலிகள் கொலை செய்தார்கள். அவை தொடர்பில் ஏதேனும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டனவா? அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்ததா?

ஆனபோதும், வடக்கு-கிழக்கு பகுதிகளில் உயிரிழந்த விடுதலைப் புலிகளை நினைவு கூர அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. புலம்பெயர் தமிழர்களின் தேவைக்கு ஏற்பவே அரசாங்கம் செயற்படுவதாக டும் பயங்கரவாதம் தலைதூக்கும் நிலைமை உருவாகியுள்ளது.

இவற்றுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் பதில் கூறவேண்டும்.

நாட்டில் உப்புக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உப்பை இறக்குமதி செய்யப் போவதில்லை என உறுதியளித்த அமைச்சர்கள் எங்கே? மக்களுக்கு உப்பு தர முடியாத அரசாங்கம் மக்களின் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கப்போகிறது என்ற சந்தேகம் எழுந்துள்ளது- என்றார். (அ)

# ஜோர்தானிய எல்லையூடாக இஸ்ரேலுக்குள் நுழைந்த இலங்கையர்கள் கைது!

கொழும்பு, மே. 20

ஜோர்தானிய எல்லையைக் கடந்து இஸ்ரேலுக்குள் நுழைந்த இரண்டு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜோர்தான் பள்ளத்தாக்கு சமூகத்தில் வசிக்கும் ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த குறித்த இரண்டு பேரும், உள்ளூர்வாசியிடம தண்ணீர் கேட்டதுடன், தமது தொலைபேசிகளுக்கு மின்னேற்றம் செய்து தரவேண்டும் என்று கோரியுள்ளனர்.

இந்தநிலையிலேயே அவர் சந்தேகப்பட்டு, இஸ்ரேலிய படையினருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து இருவரும் இஸ்ரேலிய படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது இந்த இரண்டு பேரும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் என்பதை இஸ்ரேலிய இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது. (அ)

# 9 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க குஷ் கடத்திய வெளிநாட்டவர் கைது!

கொழும்பு, மே. 20

குஷ் போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டுக்காக கட்டுநாயக்கவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையத்தில் நேற்று அதிகாலை சுங்கப் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி சுமார் 79 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர் 21 வயதான தாய்லாந்து நாட்டவர் ஆவர்.

தாய்லாந்தில் குஷ் போதைப் பொருளை வாங்கி, அதனுடன் மலேசியாவின் கோலாலம்பூருக்குப் பயணம் செய்து, பின்னர் நள்ளிரவு 12 மணிக்கு மலேசிய எயார்லைன்ஸ் விமானம் மூலம் அவர் கொழும்பு வந்தடைந்தார்.

அவரது பொதிகளில் இனிப்புகள் அடங்கிய பல பைக்கெற்றுக்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மொத்தம் 7 கிலோ 910 கிராம் குஷ் போதைப்பொருளை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். (அ)

# குறைவடைந்தது முட்டை விலை

கொழும்பு, மே. 20

அண்மைய வாரங்களுடன் ஒப்பீடுகையில் உள்ளூர் சந்தையில் முட்டை விலையில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

நாட்டில் பல பகுதிகளில் முட்டை ஒன்று 20 முதல் 24 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

தமிழ் மற்றும் சிங்கள தமிழ் புத்தாண்டு காலத்தில் முட்டை விலை 26 முதல் 28 ரூபாவாக சற்று அதிகரித்து காணப்பட்டது.

இந்த விலை வீழ்ச்சி, முட்டைகளுக்கான மிகக் குறைந்த விலை அளவைக் குறிக்கிறது என் சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# விசேட தேவையுடைய படையினர் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, மே. 20

நாட்டுக்காக அர்ப்பணிப்புகளை மேற்கொண்ட தங்களை மறந்து அரசாங்கம் செயற்படுவதாக, விசேட தேவையுடைய இராணுவ வீரர் சங்கத்தை சார்ந்தவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

விசேட தேவையுடைய இராணுவ வீரர் சங்கத்தை சார்ந்தவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டம் பத்தரமுல்லை-தியதஉயனவில் இடம்பெற்றது. தாய் நாட்டுக்காக அர்ப்பணிப்புகளை மேற்கொண்ட தங்களை மறந்து அரசாங்கம் செயற்படுவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மேலும், ஜனாதிபதி தங்களுக்கு வழங்கிய நிவாரணத்தை பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் வழங்குவதில்லை எனப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்துள்ளனர். பாதுகாப்பு அமைச்சர் மற்றும் செயலாளர் இராணுவச் சிப்பாய்களாக இருந்தபோதிலும் அவர்களுக்கு அது தொடர்பில் போதிய தெளிவு இல்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறியுள்ளனர். (அ)

# 4 இலங்கையர் கைது!

கொழும்பு, மே. 20

ஓமான் நாட்டில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இலங்கையைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஓமானின் மஸ்கட் பிராந்தியத்தில் உள்ள கடைத்தொகுதி ஒன்றில் இவர்கள் திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த கடையில் இருந்து திருடப்பட்ட இலத்திரனியல் பொருட்களுடன் திருட்டில் இலங்கையைச் சேர்ந்த 4 பேர் மற்றும் இந்தியாவை சேர்ந்த ஒருவர் உட்பட 5 பேரை ஓமான் பொலிஸார் அதிரடியாக கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் இருந்து திருடிய பொருட்களையும் அதிகாரிகள் மீட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை நிறைவேற்று அதிகாரி பதவி விலகல்!

கொழும்பு, மே. 20

தேசிய மருந்துகள் ஒழுங்குப் படுத்தல் அதிகார சபையின் தலைமை நிறைவேற்று அதிகாரி வைத்தியர் சவீன் செமகே, தனது உயிருக்கு அச்சுறுத்தல்கள் இருப்பதாகக் கூறி பதவி விலகியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, பொது வைத்திய நிபுணரான சவீன் செமகே கடந்த சனிக்கிழமை முதல் தனது பதவிலிருந்து விலகியுள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி அடையாளம் தெரியாத இரண்டு பேர் இரவு 11.30 மணி முதல் நள்ளிரவு வரை, அவரது வீட்டை சுற்றி நோட்டமிடுவது, வீட்டின் சி.சி.ரி.வி கமராவில் பதிவாகியுள்ளது. அவர்கள் செமகே உறங்கிக்கொண்டிருந்த படுக்கையறைக்குள் எட்டிப்பார்த்தமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் குறித்த இருவரையும் பொலிஸார் இன்னும் கைது செய்யவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையிலேயே அவர் பதிவி விலகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2021 முதல் 2022 ஆம் ஆண்டு மே மாதம் வரை தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையின் தலைமை நிறைவேற்று அதிகாரியாக வைத்தியர் சவீன் செமகே பணியாற்றியுள்ளார்.

இதனை அடுத்து முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவுடனான கருத்து வேறுபாடுகள் காரணமாக அவர் பதவியை இராஜினாமா செய்தார்.

மருந்து கொள்வனவு கொள் முதல் முறைகேடுகள் தொடர் பாக கெஹெலிய ரம்புக்வெல இராஜினாமா செய்ய வேண் டிய கட்டாயம் ஏற்பட்டதை அடுத்து, அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட ரமேஷ் பத்திரண, மருந்து ஒழுங்குமுறை பொறிமுறையை ஒழுங்குப் படுத்த சவீன் செமகேவை மீண்டும் தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபைக்கு கொண்டு வந்தார்.

அதன் பின்னர், 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் சவீன் செமகே தலைமை நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார். (அ)

# சீரற்ற வானிலை 685 பேர் பாதிப்பு

கொழும்பு, மே. 20

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நான்கு மாவட்டங்களில் 187 குடும்பங்களைச் சேர்ந்த 685 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம், மன்னார், திருகோணமலை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பெய்துவரும் மழை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களினால் குறித்த மாவட்டங்களில் 177 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மிலன் ஜெயதிலகவுக்கு பிணை!

கொழும்பு, மே. 20

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்ட பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மிலன் ஜெயதிலக பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றம் அவரை 1 மில்லியன் ரூபா பிணையில் விடுவித்தது.

ஒரு நிலத் திட்டத்தை அங்கீகரிப்பதில் முறைகேடு செய்ததாகவும், அரசாங்கத்துக்கு இழப்பு ஏற்படுத்தியதாகவும் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நேற்றுக் காலை இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தலைமையிலான சர்வஜன அதிகார கட்சியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளராக மிலன் ஜயதிலக தற்போது கடமையாற்றி வருகின்றார். (அ)

# தெஹிவளையில் துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, மே. 20

தெஹிவளை, நெடிமல பகுதியில் கடையொன்றில் நேற்று திங்கட்கிழமை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இனந்தெரியாத சந்தேக நபர்களே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த தாக்குதலில் உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை என பொலிஸார் கூறினர். (அ)

# சிறிய கட்சிகளின் உரிமைகளை மறுப்பதற்கு இடமளிக்கமாட்டோம்

## கூறுகிறார் ரவூப் ஹக்கீம்



கொழும்பு, மே. 20

அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கிறது என்பதற்காக தமக்கு தேவையான வகையில் தேர்தல் முறைமையை மாற்ற முடியாது. மிகச் சிறியதாக இருந்த கட்சி தற்போது பாரிய கட்சியாக மாற்றம டைந்திருந்தாலும், சிறிய கட்சிகளின் உரிமைகளை மறுப்ப தற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என்பதை ஜனாதிபதி நினைவில் கொள்ள வேண்டும் என முஸ்லிம் காங்ரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தேர்தலில்,மேல் மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வெற்றிக்கு பங்களிப்பை செய்த கட்சித் தொண்டர்களுக்கும், வேட்பாளர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-மூன்றில் இரண்டு பெரும் பான்மை இருக்கிறது என்பதற் காக தமக்கு தேவையான வகையில் தேர்தல் முறைமையை மாற்ற முடியாது.

தேர்தல் முறைமையில் மாற் போராடியிருக்கிறது. ஜனா திபதி இது தொடர்பில் நன்கு அறிவார்.

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பான குழுவில் தற்போ தைய ஜனாதிபதியும் அங்கத் துவம் வகித்திருக்கின்றார்.

அண்மையில் கூட கலந்து ரையாடலொன்றின் போது நான் இது தொடர்பில் அவரி டம் தெரிவித்திருந்தேன். தற் போதுள்ள தேர்தல் முறைமை யில் சிக்கல் காணப்படுகிறது.

எனவே நாம் பழைய முறை மைக்கே செல்வோம் என ஜனா திபதியிடம் குறிப்பிட்டிருந் தேன். அவர் அதனை ஓரளவுக்கு ஏற்றுக் கொண்டார். ஆனால் காலம் போதாது என்பதால் இந்த முறைமையின் கீழ் செல் வோம் என அவர் கூறினார்.

எவ்வாறிருப்பினும் தற் போது ஏற்பட்டுள்ள பிரச் னையை தீர்ப்பதற்காக தனக் குள்ள மூன்றில் இரண்டு பெரும் பான்மையைப் பயன்படுத்திக் கொள்ள ஜனாதிபதி முயற்சிப் பது தொடர்பில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்ப டுகின்றன.

மிகச் சிறியதாக இருந்த கட்சி தற்போது பாரிய கட்சி யாக மாற்றமடைந்திருந்தாலும், சிறிய கட்சிகளின் உரிமைகளை மறுப்பதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என் பதை ஜனாதிபதி நினைவில் கொள்ள வேண்டும்.

வடக்கு, கிழக்கில் ஆட்சி யமைப்பதற்காக இலங்கை தமிழரசு கட்சி எம்முடன் கைகோர்த்திருக்கிறது. அதற்க மைய அக்கட்சியுடன் ஒப்பந்தத் தில் கைச்சாத்திடுவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள் ளது-என்றார். (அ)

# இந்தியாவிலிருந்து வருகிறது 2800 மெற்றிக் தொன் உப்பு!

கொழும்பு, மே. 20

இந்தியாவில் இருந்து இறக் குமதி செய்யப்படும் 2,800 மெற்றிக் தொன் உப்பு வரும் 23 ஆம் திகதி நாட்டை வந்தடை யும் என தேசிய உப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவையின் ஒப்புத லுடன், தேசிய உப்பு நிறுவனம் இந்தியாவிலிருந்து 20,000 மெற்றிக் தொன் உப்பை இறக்கு மதி செய்துள்ளது, மேலும் அதில் 2,800 மெற்றிக் தொன் முதல் தொகுதி நாட்டுக்கு வழங்கப்படும் என்று தேசிய உப்பு நிறுவனத்தின் பொது முகாமையாளர் துவான் மன்சில் தெரிவித்தார்.

உணவுக்காக இறக்குமதி செய்யப்படும் அயடின் கலக் காத உப்பு நாட்டை வந்தடைந் ததும், அது அயடின் கலக்கப் பட்டு 27 மற்றும் 28 ஆம் திக திகளில் சந்தைக்கு வெளியிடப் படும் என்று எதிர்பார்க்கப்ப டுவதாக அவர் மேலும் கூறி னார்.

தேசிய உப்பு நிறுவனத்தைத் தவிர, லங்கா உப்பு நிறுவனம் 10,000 மெற்றிக் தொன் உப்பை யும், மீன்வள அமைச்சு 10,000 மெற்றிக் தொன் உப்பையும் இந் தியாவிலிருந்து இறக்குமதி செய்யும் என்று தொழில்துறை மேம்பாட்டு அமைச்சு தெரிவித் துள்ளது. (அ)

# வெளிநாட்டுத் துப்பாக்கியை காரில் மறைத்து வைத்திருந்த இருவர் கைது

கொழும்பு, மே. 20

மாத்தளை யடவத்த பகுதியில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை காரில் மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள் ளனர் என பொலிஸார் தெரி வித்தனர்.

குறித்த பகுதியில் யடவத்த பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர்கள் கைது செய் யப்பட்டுள்ளதுடன் 09 மிமீ ரக துப்பாக்கியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நாரம்மல மற்றும் குருணாகல் பகுதியை சேர்ந்த 39 மற்றும் 44 வயது டையவர்கள் ஆவர்.

சம்பவம் தொடர்பில் யடவத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர். (அ)

# ஐந்து மாதங்களுக்குள் 19000 பேருக்கு டெங்கு!

கொழும்பு, மே. 20

நாட்டில் இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 19,000 அதிகமான டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள் ளனர்.

இந்த காலப்பகுதியில் 07 டெங்கு மரணங்கள் பதிவா கியுள்ளதாகவும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்தது.

இந்நிலையில் டெங்கு ஒழிப்பு வாரம் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது.

டெங்கு அபாயம் அதிகமா கக் காணப்படும் சுகாதார வைத் திய அதிகாரி பிரிவுகளை உள் ளடக்கி டெங்கு ஒழிப்பு வாரம் முன்னெடுக்கப்படுகின்றது.

இதன்போது வீடுகள், பாடசாலைகள் உள்ளிட்ட அனைத்து சுற்றுப்புறங்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்ப டுமென தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்தது. (அ)

# மறுவாழ்வுச் சிகிச்சை பெற்றுவரும் நபர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, மே. 20

போதைப்பொருள் பாவனை யிலிருந்து மீள்வதற்கு மறு வாழ்வு சிகிச்சை பெற விரும்பும் நபர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டில்அதிகரித்துள்ளதாக போதைப்பொருள் மறுவாழ்வு பணியகம் தெரிவித்துள்ளது.

இதன்படி தற்போது போதைப்பொருள் மறுவாழ்வு பணியகத்தின் மேற்பார்வை யின் கீழ் இயங்கும் மூன்று மையங்களில் தற்போது 450 நபர்கள் மறுவாழ்வு பெற்று வருகின்றனர்.

இந்த மையங்களில் மொத்தமாக 1,120 நபர்களை தங்க வைப்பதற்குரிய வசதிகள் உள்ளன. அத்தோடு தற்போது 670 நபர்களை தங்கவைத்து அவர்களுக்கு மறுவாழ்வளிப்ப தற்குரிய வசதிகளும் உள்ளன என தெரிவிக்கப்பட்டது. (அ)

# சிகிச்சை பெறும் படையினரின் நலன் விசாரித்தார் ஜனாதிபதி



கொழும்பு, மே. 20

ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்க நேற்றுக் காலை அத்திடியவில் உள்ள "மிஹிந்து செத் மெதுர" சுகாதார விடு திக்குச் சென்று அங்கு தங்கி சிகிச்சை பெற்று வரும் படை யினரின் நலன் குறித்து விசா ரித்தார்.

படையினரைச் சந்தித்து அவர்களுடன் சுமுகமான உரையாடலில் ஈடுபட்ட ஜனா திபதி, அவர்கள் வரைந்த ஓவி யங்கள் மற்றும் படைப்புக ளைப் பார்வையிட்டார்.

முப்பது வருட யுத்தம் கார ணமாக வடக்கு மற்றும் தெற் கில் ஏராளமானோர் உயிரக ளையும் கைகால்கள் மற்றும் உடல் அங்கங்களை இழந்து நிரந்தரமாக அங்கவீனமுற்ற தெரிவித்த ஜனாதிபதி, இது போன்ற ஒரு நிலைமை மீண் டும் ஏற்பட ஒருபோதும் அனு மதிக்கப் போவதில்லை என்றும் வலியுறுத்தினார்.

அங்கவீனமுற்ற படையினர் மற்றும் அவர்களது குடும்பத்தி னரின் நல்வாழ்வுக்காக அர்ப்ப ணிப்புடன் தொடர்ந்தும் செயற்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மிஹிந்து செத் மெதுரா சுகாதார விடுதியில் பணிபுரியும் மருத்துவர்கள் தலைமையிலான உத்தியோகத்தர்களுடனும் ஜனாதிபதி அநுர குமார கருத் துக்களைப் பரிமாறிக் கொண் டார். படையினருக்கு மேலும் மருத்துவ மற்றும் சேவை வச திகளை வழங்குவது தொடர் பில் கவனம் செலுத்தப்பட்டது. (அ)

# பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை ஆய்வு செய்வதற்கு 4 பேர் கொண்ட குழு!

கொழும்பு, மே. 20

பட்டலந்த ஆணைக்குழு வின் அறிக்கையை ஆய்வு செய் வதற்கு சட்ட மா அதிபரினால் நான்கு பேர் கொண்ட குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பெரும் சர்ச்சையை ஏற்ப டுத்தியுள்ள பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கை, கடந்த மார்ச் மாதம் 14 ஆம் திகதி சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவால் பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

தொடர்ந்து இந்த அறிக்கை மீதான இரண்டு நாள் விவாதம் அண்மையில் பாராளுமன்றத் தில் இடம் பெற்றது.

இந்த நிலையிலேயே, பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கை, ஜனாதிபதி அநுரகு மார திஸநாயக்கவின் அறிவு றுத்தலின் அடிப்படையில் சட்ட மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (அ)

# தீர்வுகள் கிடைக்காவிடின் தொடர் வேலைநிறுத்தம்!

கொழும்பு, மே. 20

ரயில் நிலைய அதிபர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு இன்றைக்குள் அரசாங்கம் ஏற் றுக்கொள்ளக்கூடிய தீர்வுகளை வழங்காவிட்டால், தொடர்ச் சியான வேலைநிறுத்தத்தில் ஈடு படுவோம் என்று ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார்.

மேலும், வேலைநிறுத்தத் தைத் தொடர்வது குறித்து முடிவு செய்ய தொழிற்சங்கத் தின் நிர்வாகக் குழு நாளை கூடும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# தென்மேற்கு பருவமழை ஆரம்பம்!

கொழும்பு, மே. 20

நாடு முழுவதும் தென்மேற்கு பருவமழை படிப்படியாக நிலைபெற்று வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பல பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ, வடமேல், மத்திய, தென் மற்றும் வடக்கு மாகாணங்களில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, நுவரெலியா, புத்தளம் மற்றும் கண்டி மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிக கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வட மத்திய மாகாணத்திலும் இடைக்கிடையே மழை பெய்யக்கூடுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவு நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வடமேல், வடமத்திய, வடக்கு மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு மணிக்கு 30 முதல் 40 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள பொதுமக்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

(அ)

# 2023 பொருளாதார நெருக்கடியால் 15.1 வீதமானோர் தொழில் இழப்பு!

## புள்ளிவிவரத் திணைக்களம் தகவல்

கொழும்பு, மே. 20

**கடந்த 2023 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக, 15.1 வீதமானவர்கள் தொழிலை இழந்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

நாட்டில் 60.5 வீதமான குடும்பங்களின் மாத வருமானம் குறித்த காலப்பகுதியில் குறைவடைந்துள்ளதாகவும் அந்த திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

2023 ஆம் ஆண்டில் பொருளாதார நெருக்கடியின் தாக்கம் குறித்து மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்ட சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு இறுதி அறிக்கையில் இது தெரியவந்துள்ளது.

மேற்படி அறிக்கையின் தரவுகளுக்கு அமைவாக, குடும்பம் ஒன்றின் சராசரி மாதாந்த செலவினம் 91.1 வீதமாக அதிகரித்துள்ளதோடு, 5.3 வீதமான குடும்பங்களின் மாதாந்த செலவினத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

இலங்கையில் 22 வீதமான குடும்பங்கள் பொருளாதார நெருக்கடியால் கடன் நெருக்கடியை எதிர்கொள்கின்றன என்றும், நாட்டின் 7 வீதமான மக்கள் முறையான சுகாதாரப் பராமரிப்பை நாடவில்லை என்றும் மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# 304 ஆயுர்வேத மருத்துவர்களை நியமிக்க திட்டம்

கொழும்பு, மே. 20

நாட்டின் பாரம்பரிய சுகாதார சேவைகளை வலுப்படுத்த 304 ஆயுர்வேத மருத்துவர்களை நியமிக்க ஆயுர்வேதத் திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று ஆணையர் தம்மிக அபேகுணவர்தன தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து முறையான விண்ணப்ப முறை மூலம் ஆட்சேர்ப்பு செயல்முறை தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுர்வேத திணைக்க ஆணையாளரின் கூற்றுப்படி, புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவர்கள் ஒகஸ்ட் முதல் கடமைகளைப் பொறுப்பேற்க உள்ளனர்.

# நீதித்துறையின் அதிகாரிகளுக்கு சமூக ஊடகம் மூலம் அபகீர்த்தி!

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கவலை

கொழும்பு, மே. 20

சமூக ஊடகங்களில் நீதித்துறை அதிகாரிகளை இலக்கு வைத்து வெளியிடப்படும் சில பதிவுகள் குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

நீதித்துறை அதிகாரிகளுக்கும் நீதி அமைப்புக்கும் தீங்கு விளைவிக்கும் சில கருத்துகள் மற்றும் பதிவுகள் சில சமூக ஊடக தளங்களில் வெளியிடப்படுவது கவலை அளிப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சிலர் சமூக ஊடகங்கள் மற்றும் இணையத்தில் நீதித்துறை அதிகாரிகளின் புகைப்படங்களை வெளியிட்டுள்ளதாகவும், எந்த உண்மையும் அடிப்படையும் இல்லாமல் சில அறிக்கைகளை வெளியிட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதன்படி, எந்தவொரு அறிக்கை அல்லது கருத்தையும் வெளியிடும்போது விசாரணை செயல்முறைக்கு பாதகம் விளைவிக்கும் அல்லது தேவையற்ற பொது அழுத்தத்துக்கு வழிவகுக்கும் எந்தவொரு நடத்தையிலிருந்தும் விலகி இருக்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பொதுமக்களைக் கேட்டுள்ளது.

(அ)

# தொடர்ந்தும் செயற்பாட்டிலுள்ள புலிகளின் கருத்தியல், அரசியல்!

## மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் சுட்டிக்காட்டு



கொழும்பு, மே. 20

"தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் போர் ஆற்றல் அழிக்கப்பட்டிருந்தாலும் அவ்வமைப்பின் கருத்தியல் மற்றும் அரசியல் என்பன தொடர்ந்தும் செயற்படுகின்றன."

இவ்வாறு இறுதிக்கப்பட்டப் போரின்போது 57 ஆவது படையணியின் கட்டளைத் தளபதியாக செயற்பட்ட மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் சுட்டிக் காட்டினார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றின்போது இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-பயங்கரவாதிகளின் 'பிரிவினைவாத" நோக்கத்தை தோற்கடிப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்தே செயற்பட்டோம்.

இறுதிப்போரின்போது அவ்வமைப்பின் பிடிக்குள் இருந்த 3 இலட்சம் வரையான சிவில் மக்களை மீட்டோம். எமது உணவு, மருந்தைக்கூட அவர்களுக்கு வழங்கினோம். இதனை நாம் மகிழ்ச்சியுடனேயே செய்தோம்.

நிலைமை அப்படி இருக்கையில், இலங்கையில் இனப்படுகொலை நடந்தது என்பதை ஏற்றுக்கொள்ளாவிட்டால் கனடாவில் வாழும் சிங்களவர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என அந்நாட்டின் அரசியல்வாதியொருவர் கூறியுள்ளார். அவரின் கருத்து நகைச்சுவைத்தனமானது.

பிரிவினைவாத அமைப்பின் போர் ஆற்றலை நாம் தோற்கடித்திருந்தாலும் பிரிவினைவாத வேலைத்திட்டத்தின் கருத்தியல், அரசியல் என்பன வேறு கோணத்தில் அடிப்படைவாத டயஸ்போராக்களால் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. அனைத்து தமிழ் டயஸ்போராக்களும் அல்ல. அவர்களுக்குள் உள்ள அடிப்படைவாத டயஸ்போராக்களே இச்செயலில் ஈடுபடுகின்றனர்.

தேசிய அமைப்புகள், சமூக வலைத்தளங்கள், தேசிய ஊடகங்கள், நிபுணர்கள், புத்திஜீவகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பணம் வழங்கி மேற்படி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது-என்றார்.

(அ)

# படை வீரர்கள் நினைவு தினத்தை பெரமுனவும் இன்று நடத்துகிறது!

கொழும்பு, மே. 20

பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய படைவீரர் நினைவு தினம் நேற்று ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற நிலையில், பொதுஜன பெரமுன கட்சியும் படை வீரர் நினைவு தினத்தை நடத்தவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையில் இன்று குறித்த நிகழ்வு நடைபெறும் என்று பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

'தேசிய படை வீரர் நினைவு தின நிகழ்வில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் கட்டாயம் பங்கேற்க வேண்டும். ஜனாதிபதி பங்கேற்கமாட்டார் என எமக்கு தகவல் கிடைத்த பிறகு, படை வீரர் நினைவு தினத்தை மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடத்த அனுமதி கோரினோம். அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

எது எப்படி இருந்தாலும் இன்று நாம் படையினரை நினைவு கூருவோம். அதற்குரிய நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாலை 5 மணிக்கு படையினர் நினைவு தூபிக்கு முன்பாக நாட்டுக்குரிய எமது கடமை நிறைவேற்றப்படும்." எனவும் பெரமுனவின் செயலளர் குறிப்பிட்டார்.

(அ)

# 15,000 மெற்றிக் தொன் உப்பு கடும் மழையினால் சேதம்!

கொழும்பு, மே. 20

திடீரென பெய்த கடும் மழை காரணமாக சுமார் 15,000 மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான உப்பு அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட உப்பு உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

தற்போது நாடு முழுவதும் நிலவிவரும் கடுமையான உப்பு பற்றாக்குறைக்கு, உப்பு உற்பத்திக்கு தேவையான சூரிய ஒளி போதியளவு கிடைக்காததும், தொடர்ச்சியாக மழை பெய்வதும் இதற்குரிய முக்கிய காரணம் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இலங்கையின் மொத்த உப்பு உற்பத்தியில் புத்தளம் மாவட்டம் சுமார் 60 வீதம் பங்களிப்பை வழங்கி வருவதுடன், வெயில் காலங்களில் சுமார் 100,000 மெற்றிக் தொன்களுக்கும் அதிகமான உப்பு அறுவடை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தனியார் மற்றும் அரச உப்பு உற்பத்தியாளர்களின் தொடர்புடைய துறைகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், புத்தளம் மாவட்டத்தில், சிறுபோக பருவத்தில் உப்பு அதிக அறுவடைக்கு வழிவகுத்துள்ள நிலையில் தொடர்ச்சியாக பெய்து வந்த கடும் மழை காரணமாக, புத்தளத்தில் உப்பு அறுவடை மீண்டும் தோல்வியடைந்துள்ளதாக உப்பு உற்பத்தியாளர்கள் கூறினர்.

(அ)

# சாமர சம்பத் எம்.பி.க்கு பிணை!

கொழும்பு, மே. 20

புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு பதுளை நீதிவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

அதன்படி, பதுளை நீதிவான் நுஜித் டி சில்வா, பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநா யக்கவை தலா 1 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணை களில் விடுவிக்க உத்தரவிட்டார்.

ஊழல் தொடர்பான மூன்று தனித்தனி வழக்குகள் தொடர்பாக கடந்த மார்ச் 27 அன்று பாராளுமன்ற உறுப்பினர் தசநாயக்க கைது செய்யப்பட்டார். இந்தக் குற்றச்சாட்டுகள் அவர் 2016 ஆம் ஆண்டு ஊவா மாகாண முதலமைச்சராக இருந்த காலத்தில் இருந்து வந்தவை.

முன்னதாக, வழக்குகள் தொடர்பாக இரண்டு தனித்தனி சந்தர்ப்பங்களில் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் அவருக்கு பிணை வழங்கப்பட்டது.

அதே நேரத்தில் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

(அ)

# ராஜபக்ஷ தரப்பினருடன் சஜித் பிரேமதாஸ கூட்டு

## கஜேந்திரகுமார் எம். பி. கடும் சாடல்



மட்டக்களப்பு, மே 20

**தமிழ் மக்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாத சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுடன் (ராஜபக்ஷ தரப்பினருடன்) சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தி இணைந்து உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதற்காக பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளன என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

எனவே, ஐக்கிய மக்கள் சக்தி தொடர்பில் தமிழ் மக்கள் ஆழமாக சிந்திக்க வேண்டும். இதேவேளை தெற்கில் இருக்கக் கூடிய சாதாரண மக்களின் விருப்பத்தை மீறுகின்ற, அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் நடவடிக்கைக்கு தமிழ்க் கட்சிகள் உடந்தையாக செயல்படக் கூடாது எனவும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு வவுணதீவு, நரிப்புதோட்டம் பிரதேசத்தில் முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி சபைகளில் கூட்டாக செயல்பட்டு ஆட்சி அமைப்பதற்காக எங்களிடம் முதல் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஏற்பாட்டில் முதல் சுற்று பேச்சு நடைபெற்றது. இரண்டாம் கட்டமாக ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் சிறீ லங்கா பொதுஜன பெரமுன இடையே பேச்சுக்கள் நடைபெற்றன.

ரணில் விக்கிரமசிங்க பேச்சுக்களை நடத்தியபோது அது தவறு என நாங்கள் தெரிவித்தோம். உண்மையில் இரண்டாவது கட்சியாக தெற்கிலே ஐக்கிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களித்துள்ளனர்.

இதனடிப்படையில் தேசிய மக்கள் சக்தியை வேறு ஒரு தரப்பு முந்துவது பொருத்தமில்லை என்பது எங்கள் பார்வை.

இதேவேளை தேசிய மக்கள் சக்தி மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. இதனால், வாக்கு வங்கியில் அரைவாசியை 6 மாதத்தில் இழந்துள்ளது.

எனவே, அதற்கு மாற்றாக வளரக்கூடிய ஐக்கிய மக்கள் சக்தி, எந்த விதமான அறமும் இல்லாமல் நடந்து கொள்வதை ஏற்க முடியாது. சஜித் தரப்பு மொட்டுக்கட்சியை அழைத்து ஆட்சியமைக்க பேசுவதால் தென்னிலங்கையில் இருக்கக் கூடிய மக்களது அரசியல் அபிலாசைகள் மிகப் பெரும் கேள்விக்குறியாக மாறும்- என்றார். (எ)



# திருமலையில் அதிரடியாக களமிறங்கிய அதிகாரிகள்

திருகோணமலை, மே 20

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு திருகோணமலை- தோப்பூர் பொதுச் சுகாதார பிரிவில் நேற்றையதினம் காலை வீட்டுக்கு வீடு விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார், கடற்படையினர், டெங்கு ஒழிப்பு உத்தியோகத்தர்கள் இணைந்து இந்த பரிசோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது டெங்கு நோய் பரவும் வகையில் வீட்டுச் சூழலை வைத்திருந்தோருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அத்தோடு டெங்கு பரவாமல் வீட்டுச் சூழலை துப்புரவு செய்து பாதுகாப்பாக வைத்திருப்பது தொடர்பில் ஆலோசனை வழங்கப்பட்டது. (எ)

# அக்கரைப்பற்று சபைகளுக்கு சபீஸ் மற்றும் முபாஸ் தெரிவு

அக்கரைப்பற்று, மே 20

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அக்கரைப்பற்று மாநகர சபை மற்றும் பிரதேச சபையில் போட்டியிட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிக்கு 3 ஆசனங்கள் கிடைத்தன.

இந்த நிலையில், நேற்று முன்தினம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அக்கரைப்பற்று மத்திய குழு கூட்டம் நடைபெற்றது. இதன்படி, அக்கரைப்பற்று மாநகர சபைக்கு அக்கரைப்பற்றின் அனைத்துப்பள்ளிவாசல்களின் முன்னாள் தலைவர் எஸ். எம் சபீஸூம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை முன்னாள் பணிப்பாளர் பொறியியலாளர் எம். சிராஜூடீனும் அக்கரைப்பற்று பிரதேச சபைக்கு எம்.எம். முபாஸூம் தெரிவு செய்யப்பட்டனர். (எ-06)



# மட்டு. மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் யோசப் பொன்னையா மறைவு

மட்டக்களப்பு, மே 20

மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் யோசப் பொன்னையா ஆண்டகை நேற்று இறையடி சேர்ந்ததாக ஆயர் இல்லம் அறிவித்துள்ளது.

இவர் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக சுகவீனமுற்றிருந்த நிலையில் நேற்று தனது 74 ஆவது வயதில் காலமானார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் முதலாவது ஆயராக யோசப் பொன்னையா திருநிலைப்படுத்தப்பட்டதுடன் மட்டக்களப்பு மறை மாவட்டத்துக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்தே முதன் முறையாக தெரிவு செய்யப்பட்ட ஆயராக திகழ்ந்தார்.

இவரது இறுதிக் கிரியைகள் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# சிறுவர் பாதுகாப்பு குறித்து விசேட கலந்துரையாடல்!

மட்டக்களப்பு, மே 20

சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் யுனிசெப் பிரதிநிதிகளுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த 17 ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்ரினா முரளிதரன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் யுனிசெப் நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்புப் பிரிவின் தலைவி ரியோனா உள்ளிட்ட அந்த நிறுவனத்தின் உயரதிகாரிகள், மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரப் பணிமனையின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.



இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது முன்னெடுக்கப்படும் சிறுவர் பாதுகாப்பு முயற்சிகள், குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான சேவைத்தரத்தை மேம்படுத்தல், ஒட்டுமொத்த குழந்தை பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்தல்,

மாவட்டத்தில் பாதிக்கப்படும் சிறுவர் சிறுமிகளை பாதுகாப்பதில் அரச உத்தியோகத்தர்களின் வகிபாகம், அதனை நடைமுறைப்படுத்தும் அரச உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள், பாடசாலை இடைவிலகல், சிறுவர் துஷ்பிரயோகம், தற்கொலை முயற்சிகளை முறியடித்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

எதிர்காலத்தில் சிறுவர், சிறுமிகளை பாதுகாப்பதில் கையாள வேண்டிய விடயங்கள், சிறுவர் நேய அலுவலகங்களாக மாற வேண்டிய அலுவலகங்கள் தொடர்பிலும் மாவட்ட அரசாங்க அதிபரால் இதன்போது ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. (எ)

# மதுபோதையில் வாகனம் செலுத்திய பொலிஸ் உத்தியோகத்தர் சிக்கினார்

கல்முனை, மே 20

அம்பாறையில் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காவந்திஸ்ஸ பாடசாலைக்கு அருகில் கடந்த 16 ஆம் திகதி பிற்பகல், அம்பாறை பிராந்திய போக்குவரத்து பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றத்தின் பேரில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரை எதிர்வரும் 23 ஆம் திகதி அம்பாறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, அவர் மட்டக்களப்பு ஆயித்தியமலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் பொலிஸ் உத்தியோகத்தர் எனத் தெரியவந்துள்ளது. மேற்படி சம்பவத்தைத் தொடர்ந்து, மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியின் உத்தரவுக்கமைய குற்றஞ் சாட்டப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் 17 ஆம் திகதி முதல் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

வர்த்தகத்தை ஆயுதமாகப் பயன்படுத்தி

# இந்தியா- பாகிஸ்தான் போரை நிறுத்தினேன்!

## அங்கீகாரம், பெயர், புகழ் கிடைக்கவில்லை - ட்ரம்ப்



வாஷிங்டன், மே 20

**வர்த்தகத்தை ஆயுதமாகப் பயன்படுத்தி இந்தியா - பாகிஸ்தான் போரை நிறுத்தினேன். ஆனால், அதற்கான அங்கீகாரம் எனக்கு கிடைக்கவில்லை. பெயரும் புகழும் கிடைக்கவில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.**

தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் ட்ரம்ப் கூறுகையில், மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் மிகப்பெரிய வெற்றியை பெற்றிருக்கிறேன்.

அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் இடையே பொருளாதார உறவை வலுப்படுத்தி உள்ளேன். என்னைப் பொறுத்தவரை வர்த்தகத்தை ஆயுதமாக பயன்படுத்தி அமைதியை நிலைநாட்டி வருகிறேன்.

அண்மையில் இந்தியா - பாகிஸ்தான் இடையே மிகப் பெரிய போர் வெடித்தது. இரு நாடுகள் இடையே அணு ஆயுதப் போர் மூளும் அபாயம் எழுந்தது.

உடனடியாக இரு நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்காவின் மூத்த அமைச்சர்கள், அதிகாரிகளுக்கு உத்தரவிட்டேன். வர்த்தகத்தை ஆயுதமாக பயன்படுத்தி இந்தியா - பாகிஸ்தான் போரை நிறுத்தினேன். ஆனால், அதற்கான அங்கீகாரம் எனக்கு கிடைக்கவில்லை. பெயரும் புகழும் கிடைக்கவில்லை.

ரஷ்யா - உக்ரைன் இடையே பல ஆண்டுகளாக போர் நடைபெறுகிறது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இந்தப் போரால் சோர்வடைந்துவிட்டார்.

வர்த்தகத்தை ஆயுதமாக பயன்படுத்தி ரஷ்யா - உக்ரைன் இடையே அமைதியை ஏற்படுத்த முடியும் என்று உறுதியாக நம்புகிறேன்.

அமெரிக்கா, ஈரான் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இதிலும் வர்த்தகத்தை முன்னிறுத்தி நல்ல தீர்வை எட்ட முயற்சி செய்வேன். ஈரானிடம் அணு ஆயுதங்கள் இருக்கக்கூடாது என்பதில் அமெரிக்கா மிகவும் உறுதியாக இருக்கிறது. சிரியாவில் ஆட்சி நடத்தும் புதிய அரசு மாற்றத்தை விரும்புகிறது. இதன் காரணமாக அந்த நாட்டின் மீதான தடைகளை நீக்கியுள்ளேன்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது இருமுறை என்னைக் கொலை செய்ய முயற்சிகள் நடைபெற்றன. இது தொடர்பில் விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த விசாரணையில் முக்கிய தகவல்கள், ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அவற்றை இப்போதைக்கு பகிரங்கமாக வெளியிட முடியாது என்று ட்ரம்ப் தெரிவித்தார். (எ)



## பாப்பரசர் பதவியேற்றார்

ரோம், மே 20

வத்திக்கானில் இலட்சக்கணக்கானோர் முன்னிலையில் புதிய பாப்பரசராக 14ஆம் லியோ நேற்று முன்தினம் பதவியேற்றுள்ளார். பாப்பரசர் 14ஆம் லியோவுக்கு பாப்பரசரின் அதிகாரத்தைக் குறிக்கும் வகையில் மீன் உருவ மோதிரம் அணிவிக்கப்பட்டது. பதவியேற்பின்போது போரால் பாதிக்கப்பட்ட காஸா, உக்ரைன் மக்களுக்காக பாப்பரசர் 14ஆம் லியோ சிறப்பு பிரார்த்தனை மேற்கொண்டார்.

## விமானத் தளம்மீது இந்தியா தாக்குதல்

### பாகிஸ்தான் பிரதமர் ஒப்புதல்

இஸ்லாமாபாத், மே 20

பாகிஸ்தானின் நுர் கான் விமானப்படைத் தளம் மீது இந்தியா தாக்குதல் நடத்தியதை அந்த நாட்டு பிரதமர் ஷெபாஷ் ஷெரீப் ஒப்புக் கொண்டுள்ளார்.

இஸ்லாமாபாத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

இராணுவத் தளபதி அசிம் முனிர் கடந்த 10ஆம் திகதி அதிகாலை 02.30 மணிக்கு என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது, இந்தியாவின் ஏவுகணைத் தாக்குதலில் ராவல்பிண்டியில் உள்ள நுர் கான் விமானப்படைத் தளம் உட்பட பல விமானப் படைத் தளங்கள் சேதமடைந்துள்ளதாக தெரிவித்தார். அப்போது, அவரின் குரலில் தன்னம்பிக்கையும் தேசபக்தியும் இருந்தது என்பதை கடவுள் மீது சத்தியம் செய்து சொல்கிறேன்.

நாட்டைக் காப்பாற்ற நமது விமானப்படை உள்நாட்டு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியது. அத்துடன் சீனாவின் நவீன சாதனங்கள் மற்றும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தியது- என்றார். (எ)

## வெளிநாடுகளுக்கு அமைதி குழு பாகிஸ்தான் - இந்தியா ஏற்பாடு

இஸ்லாமாபாத், மே 20

பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து விளக்குவதற்காக முக்கிய நட்பு நாடுகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களை இந்தியா அனுப்பவுள்ள நிலையில், பாகிஸ்தானும் அமைதிக்கான தனது தரப்பு நிலைப்பாட்டை விளக்கும் குழுவை உலக நாடுகளுக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளது.

முன்னதாக, பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் பிலாவல் பூட்டோ சர்தாரி, இந்தியா - பாகிஸ்தான் இடையே சமீபத்தில் உருவாகியிருக்கும் பதற்றங்களுக்கு மத்தியில் பாகிஸ்தானின் நிலைப்பாட்டை விளக்க ஒரு குழுவை வழிநடத்துவதற்கு பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரிப் தன்னைக் கேட்டுக் கொண்டதாக தெரிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து இந்த விடயம் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து சர்தாரி தனது முகநூல் பக்கத்தில் வெளியிட்டிருந்த பதிவில், "பிரதமர் ஷெபாஸ் ஷெரிப் என்னை அழைத்து அமைதிக்கான பாகிஸ்தான் தரப்பு முயற்சிகளை உலக அரங்கில் விளக்குவதற்கான குழுவை வழிநடத்துமாறு என்னைக் கேட்டுக்கொண்டார். இந்த இக்கட்டான நேரத்தில் இந்த சவாலான பணியை ஏற்றுக் கொள்வதையும் தேசத்துக்கு சேவையாற்றுவதையும் பெருமையாக கருதுகிறேன்"என்று அவர் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கிறது என்ற குற்றச்சாட்டினை எதிர்கொண்டுவரும் பாகிஸ்தான் தனது நற்பெயரை சரி செய்வதற்கான முயற்சியாக இந்த அறிவிப்பு பார்க்கப்படுகிறது.

பயங்கரவாதத்தை கட்டுப்படுத்த தவறியதாலும், பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் 9 பயங்கரவாத நிலைகளைக் குறிவைத்து தாக்கிய இந்தியாவின் ஒப்ரேஷன் சிந்தூருக்கு பதிலடியாக பொதுமக்களை குறிவைத்து தாக்கி நம்பகத்தன்மையை குறைத்துக் கொண்டதாலும் சர்தாரியின் குழு ஒரு பெரும் சவாலை சந்திக்க வேண்டியிருக்கும் என்றும் கூறப்படுகிறது.

முன்னதாக கடந்த சனிக்கிழமை, அனைத்து கட்சி குழு குறித்த அறிவிப்பை பகிர்ந்து கொண்ட பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ, "மிக முக்கியமான தருணங்களில் இந்தியா ஒற்றுமையாக உள்ளது. பயங்கரவாதத்துக்கு எதிரான பூஜ்ஜிய சகிப்புத்தன்மை என்ற செய்தியை எடுத்துச் செல்லும் ஏழு அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் விரைவில் முக்கிய கூட்டாளி நாடுகளுக்குச் செல்வார்கள். வேறுபாடுகளுக்கு அப்பால், அரசியலுக்கு அப்பாற்பட்ட தேசிய ஒற்றுமையின் சக்திவாய்ந்த பிரதிபலிப்பு" என்று தெரிவித்திருந்தார்.

பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், முக்கிய அரசியல் பிரமுகர்கள் மற்றும் புகழ்பெற்ற தூதரக அதிகாரிகள் ஒவ்வொரு குழுவிலும் இடம்பெறுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## பைடனுக்கு புற்றுநோய்



வாஷிங்டன், மே 20

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடனுக்கு புற்றுநோய் பாதிப்புள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

ஜோ பைடனுக்கு தற்போது 82 வயது. இவர் 2021 முதல் 2025 ஆம் ஆண்டு வரை அமெரிக்க ஜனாதிபதியாக செயல்பட்டார்.

இந்த நிலையில், ஜோ பைடனுக்கு புற்றுநோய் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. புரோஸ்டேட் வகை புற்றுநோயால் பைடன் பாதிக்கப்பட்டுள்ளார்.

மிகவும் வீரியமிக்க இந்த புற்றுநோய் அவரின் எலும்புகளுக்கும் பரவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வகை புற்றுநோய்க்கு சிகிச்சைகள் உள்ளன. ஆனால், இந்த புற்றுநோயை குணப்படுத்த முடியாது என்று தகவல் வெளியாகியுள்ளது. (எ)

## பாகிஸ்தானுக்கு 11 நிபந்தனைகள் விதித்தது சர்வதேச நாணய நிதியம்

இஸ்லாமாபாத், மே 20

பாகிஸ்தானுக்கு புதிதாக 11 நிபந்தனைகளை சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ளது.

நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் பாகிஸ்தானுக்கு 700 கோடி டொலர் கடன் வழங்க கடந்த ஆண்டு சர்வதேச நாணய நிதியத்துக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.

பாகிஸ்தானுக்கு முதல் தவணையாக 110 கோடி டொலர் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட நிலையில், கடந்த வாரம் 2ஆவது தவணையாக 102 கோடி டொலரை சர்வதேச நாணய நிதியம் விடுவித்தது. இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் உச்சத்தில் இருந்தபோது, இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி இந்தத் தொகை விடுவிக்கப்பட்டது.

தற்போது அடுத்த தவணையை விடுவிக்க பாகிஸ்தானுக்கு கூடுதலாக 11 புதிய நிபந்தனைகளை சர்வதேச நாணய நிதியம் விதித்து இருப்பதாக அந்த நாட்டு ஊடகங்களில் தகவல் வெளியாகியுள்ளது. இவற்றையும் சேர்த்து மொத்த நிபந்தனைகள் 50 ஆக அதிகரித்து இருக்கிறது. மேலும் இந்தியாவுடனான போர் பதற்றம் இந்தக் கடன் திட்டத்தில் அபாயத்தை ஏற்படுத்தும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்பட்ட கார்களை இறக்குமதி செய்ய விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும். 17.6 டிரில்லியன் ரூபாய் பட்ஜெட்டுக்கு பாராளுமன்றம் ஒப்புதல் தர வேண்டும்.

ஆண்டுக்கு 2 முறை எரிவாயு விலையை உயர்த்த வேண்டும். அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்துக்குள் உற்பத்தி செய்யயாகும் செலவுக்கு இணையாக எரிவாயு விலையை உயர்த்த வேண்டும் உள்ளிட்ட 11 நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. (எ)

# 10 விக்கெட் வித்தியாசத்தில் குஜராத் அணி அபார வெற்றி



புதுடில்லி, மே 20

19ஆவது ஓவரில் 205 ஓட்டங்கள் எடுத்து 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் குஜராத் அணி அபார வெற்றி பெற்றது.

10 அணிகள் இடையிலான 18ஆவது ஐ. பி. எல். தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் புதுடில்லியில் உள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 60ஆவது லீக் ஆட்டத்தில் டில்லி கப்பிட்டல்ஸ் - குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின.

இதில் டில்லி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக பாப் டு பிளஸ்சிஸ் - கே.எல். ராகுல் களமிறங்கினர். இதில் டு பிளஸ்சிஸ் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றினார். இதனையடுத்து கை கோர்த்த அபிஷேக் போரல் - கே.எல்.ராகுல் ஜோடி அணியை சரிவிலிருந்து மீட்டது.

சிறிது நேரம் நிதானம் காட்டிய இருவரும் நேரம் செல்ல செல்ல அதிரடியாக விளையாடினர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 106 ஆக உயர்ந்தபோது இந்த ஜோடி பிரிந்தது. அபிஷேக் போரல் 30 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதனிடையே கே.எல்.ராகுல் 35 பந்துகளில் அரைச்சதத்தை கடந்தார். அடுத்து வந்த அணித் தலைவர் அக்சர் பட்டேல் 25 ஓட்டங்களில் வெளியேறினார்.

தொடர்ந்து அதிரடி காட்டிய கே.எல். ராகுல் 60 பந்துகளில் சதம் அடித்தார். அவருக்கு ஒத்துழைப்பு கொடுத்த ஸ்டப்ஸ் தனது பங்குக்கு 21 ஓட்டங்கள் அடித்தார். நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் டில்லி அணி 3 விக்கெட்களை இழந்து 199 ஓட்டங்கள் எடுத்தது. கே.எல். ராகுல் 112 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

இதையடுத்து 200 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் குஜராத் அணி களமிறங்கியது. அந்த அணியில் தொடக்க வீரர்களாக சாய் சுதர்சன் மற்றும் சுப்மன் கில் களமிறங்கினர். தொடக்கம் முதலே இருவரும் அதிரடியாக விளையாடினர்.

19ஆவது ஓவரில் குஜராத் அணி 205 ஓட்டங்கள் எடுத்து 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் டில்லி அணியை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. சாய் சுதர்சன் 61 பந்துகளில் 108 ஓட்டங்களும் சுப்மன் கில் 53 பந்துகளில் 93 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

(எ)

# இத்தாலி ஓபின் ரென்னிஸ் சம்பியனானார் அல்காரஸ்

ரோம், மே 20

இத்தாலி ஓபின் ரென்னிஸ் தொடரில் கார்லஸ் அல்காரஸ் சம்பியனானார்.

இத்தாலி ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி ரோமில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் இத்தாலியின் ஜன்னிக் சின்னெர், ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸை எதிர்கொண்டார். ஒரு மணி 43 நிமிடம் நடந்த நடைபெற்ற இந்த ஆட்டத்தில் அல்காரஸ் 7-6 (7-5), 6-1 என்ற நேர் செட்டில் சின்னெரை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

சம்பியன் பட்டம் வென்ற அல்காரஸுக்கு இலங்கை மதிப்பில் 32. 42 கோடி ரூபாய் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டது. 2ஆவது இடம் பிடித்த சின்னெருக்கு 17.52 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. (எ)



# பிளேஓவ் சுற்றுக்கு 3 அணிகள் தகுதி

டில்லி, மே 20

நடப்பு ஐ. பி. எல். தொடரின் பிளேஓவ் சுற்றுக்கு மூன்று அணிகள் தகுதி பெற்றுள்ளன.

ஐ.பி. எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் குஜராத் டைட்டன்ஸ், டில்லீ கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின.

இதில் 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் குஜராத் அணி அபார வெற்றி பெற்றது.

இதன் மூலம் நடப்பு ஐ.பி.எல். தொடரில் பிளே ஒவ் சுற்றுக்கு ஒரே நாளில் 3 அணிகள் தகுதி பெற்றன. இதன்படி, குஜராத் டைட்டன்ஸ், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு, பஞ்சாப் கிங்ஸ் ஆகிய 3 அணிகள் பிளே ஒவ் சுற்றுக்கு தகுதி பெற்றன. எஞ்சிய ஓர் இடத்துக்கு மும்பை, டில்லி, லக்னோ ஆகிய 3 அணிகள் இடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. (எ)

# கிரிக்கெட் தொடர்களிலிருந்து விலகுவதற்கு பி.சி.சி.ஐ. முடிவு

புதுடில்லி, மே 20

ஆசிய கிரிக்கெட் தொடர்களிலிருந்து விலக பி.சி.சி.ஐ. முடிவு செய்துள்ளது.

ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. ஐ. சி. சி. தொடர்களில் ஆசிய அணிகள் சிறப்பாக செயல்படும் பொருட்டு இந்தத் தொடர் ஆசிய கிரிக்கெட் சபையால் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆசிய கிரிக்கெட் தொடர் இலங்கை மற்றும் பாகிஸ்தானில் நடைபெற்றது. இந்தத் தொடரில் இந்திய அணி சம்பியனானது.

இந்த நிலையில் கடந்த மாதம் பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து பாகிஸ்தான் மீது ஒப்ரேஷன் சிந்தூர் என்ற இராணுவ நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டது. இந்த இராணுவ நடவடிக்கையின்போது இந்தியா - பாகிஸ்தான் இடையே மோதல் வெடித்தது. நான்கு நாட்கள் நடந்த இந்த சண்டையில் ஏவுகணைகள், ட்ரோன்கள் மூலம் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதேவேளை, கடந்த 10ஆம் திகதி இருநாடுகளும் போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டன.

இதேவேளை, ஆசிய கிரிக்கெட் சங்கத்தின் தலைவராக பாகிஸ்தானின் மொஹின் நக்வி பதவி வகிக்கும் நிலையில் ஆசிய கிரிக்கெட் சங்கம் சார்பில் நடத்தப்படும் தொடர்களிலிருந்து விலக இந்திய கிரிக்கெட் சபை -பி.சி.சி.ஐ. முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அடுத்த மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள எமர்ஜிங் மகளிர் ஆசிய கிண்ணத் தொடரிலிருந்து விலகுவதாக மின்னஞ்சல் மூலம் பி.சி.சி.ஐ. தெரிவித்துள்ளது எனக் கூறப்படுகிறது. இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே நிலவி வரும் மோதல் போக்கு காரணமாக பி.சி.சி.ஐ. இந்த முடிவை எடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

(எ)

# கே. எல். ராகுல் சாதனை



புதுடில்லி, மே 20

ரி - 20 கிரிக்கெட் வரலாற்றில் அதிக சதங்கள் அடித்த 3ஆவது இந்திய வீரர் என்ற மாபெரும் சாதனையை கே. எல். ராகுல் படைத்துள்ளார்.

10 அணிகள் இடையிலான 18ஆவது ஐ. பி. எல். சீசன் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் புதுடில்லியில் உள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 60ஆவது லீக் ஆட்டத்தில் டில்லி - குஜராத் அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் கே.எல். ராகுல் அடித்த சதம் ரி - 20 கிரிக்கெட்டில் அவர் அடித்த 7ஆவது சதமாக பதிவானது. இதன் மூலம் ரி - 20 கிரிக்கெட் வரலாற்றில் அதிக சதங்கள் அடித்த 3ஆவது இந்திய வீரர் என்ற மாபெரும் சாதனையை கே. எல். ராகுல் படைத்துள்ளார்.

அந்த பட்டியல் வருமாறு,

1. விராட் கோலி - 9 சதங்கள்,
2. ரோஹித் சர்மா - 8 சதங்கள்,
3. அபிஷேக் சர்மா, கே.எல்.ராகுல் - 7 சதங்கள் எடுத்துள்ளனர். (எ)

# 10 ஓட்டம் வித்தியாசத்தில் பஞ்சாப் அசத்தல் வெற்றி

ஜெய்ப்பூர், மே 20

ராஜஸ்தானுக்கு எதிரான போட்டியில் 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் அணி வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 219 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக நேஹல் வதேரா 70 ஓட்டங்கள் அடித்தார். ராஜஸ்தான் தரப்பில் தேஷ்பாண்டே 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 220 ஓட்டங்கள் இலக்கை நோக்கி களமிறங்கிய ராஜஸ்தான் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ஜெய்ஸ்வால் - வைபவ் சூர்யவன்ஷி களமிறங்கினர். இதில் அர்ஷ்தீப் சிங் வீசிய முதல் ஓவரை அதிரடியாக எதிர்கொண்ட ஜெய்ஸ்வால் 4 பௌண்டரிகள் ஒரு சிக்ஸர் என 22 ஓட்டங்கள் அடித்து அசத்தினார்.

அவருடன் வைபவ் சூர்யவன்ஷியும் வெளுத்து வாங்க ராஜஸ்தான் அணியின் ஓட்ட வேகம் ரொக்கெட் வேகத்தில் எகிறியது. வெறும் 2. 5 ஓவர்களில் ராஜஸ்தான் அணி 50 ஓட்டங்களை கடந்தது. இவர்களின் அதிரடியால் ராஜஸ்தான் எளிதில் வெற்றி பெறும் என்று அனைவரும் நினைத்தனர். ஆனால் இந்த ஜோடி பிரிந்ததும் ஆட்டம் பஞ்சாப் பக்கம் திரும்பியது. முதல் விக்கெட்டுக்கு இருவரும் இணைந்து 4. 5 ஓவர்களில் 76 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்த நிலையில் சூர்யவன்ஷி 40 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இந்த 40 ஓட்டங்களையும் பௌண்ட்ரி மற்றும் சிக்ஸர்களில் மட்டுமே அடித்தார்.

அடுத்து வந்த சஞ்சு சாம்சன் 20 ஓட்டங்களிலும், ரியான் பராக் 13 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். அதிரடியாக ஆடி வந்த ஜெய்ஸ்வால் 50 ஓட்டங்கள் அடித்த நிலையில் ஆட்டமிழந்தார். இறுதிக் கட்டத்தில் துருவ் ஜூரெல் தனி ஆளாக போராட அவருக்கு மறுமுனையில் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஷிம்ரன் ஹெட்மயர் 12 பந்துகளில் 11 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து சொதப்பினார்.

ராஜஸ்தான் அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 22 ஓட்டங்கள் தேவைப்பட்டது. மார்க்கோ ஜான்சன் வீசிய அந்த ஓவரில் 2 விக்கெட்களை இழந்த ராஜஸ்தான் அணியால் 11 ஓட்டங்கள் மட்டுமே அடிக்க முடிந்தது. துருவ் ஜூரெல் 53 ஓட்டங்கள் அடித்து இறுதிவரை போராடியும் பலன் கிடைக்கவில்லை.

முடிவில் 20 ஓவர்கள் முழுமையாக விளையாடிய ராஜஸ்தான் அணியால் 7 விக்கெட்களை இழந்து 209 ஓட்டங்கள் மட்டுமே அடிக்க முடிந்தது. இதனால் பஞ்சாப் அணி 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பஞ்சாப் தரப்பில் அதிகபட்சமாக ஹர்ப்ரீத் பிரார் 3 விக்கெட்களும், மார்க்கோ ஜான்சன் மற்றும் ஓமர்சாய் தலா 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் பஞ்சாப் அணி புள்ளிப் பட்டியலில் 2ஆவது இடத்துக்கு முன்னேறியது. (எ)

## நாங்கள்...

கட்டியெழுப்புவதில் எங்களுக்கு நம்பிக்கையைத் தரும். அதற்காக நாம் அனைவரும் சேர்ந்து ஒரு புதிய போராட்டத்தை ஆரம்பிப்போம்." என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல, படைவீரர்கள் நினைவிடத்தில் இன்று பிற்பகல் நடைபெற்ற 16 ஆவது படைவீரர்கள் தின நினைவு நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த தினத்தை நினைவு கூரும் நிகழ்வு நேற்று பிற்பகல் பத்தரமுல்லை, படைவீரர்கள் நினைவிடத்துக்கு முன்பாக, முப்படைகளின் தளபதி, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த ஜானதிபதி-

எமது நாடு பல தசாப்தங்கள் யுத்தத்துக்கு முகங்கொடுத்தது. யுத்தம் எமது நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் அழிவை தந்தது. பல வருடங்களின் பின்னர் யுத்தத்தை நிறைவு செய்ய முடிந்தது. யுத்தத்தை நிறைவு செய்ய உயிர்த் தியாகம் செய்த படையினரை நாம் இன்று நினைவு கூருகிறோம். இது முக்கியமான வரலாற்றுத் தினமாகும். இது யுத்த நிறைவு தினம் மட்டுமன்றி, மீண்டும் நாட்டில் யுத்தம் ஏற்படுவதைத் தடுக்க சிங்கள, தமிழ், முஸ்லிம், பேர்கர், மலே, கிறிஸ்தவர் என, சகல மக்களும் ஒரே நாட்டுக்குள் ஒற்றுமையாக நாட்டைக் கட்டியெழுப்பப் போராடுகின்றனர்.

யுத்தத்தை நிறைவு செய்ய எமது படையினர் உயிர்த்தியாகம் செய்தனர். இங்குள்ள நினைவுச் சின்னம் முழுவதும் அவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. யுத்தத்தினால் பலர் அங்கவீனமுற்றனர். பலர் தமது உடல் உறுப்புகளை இழந்தனர். அவர்களின் உறவினர், குடும்பத்தினர் பெரும் தியாகம் செய்தனர். அவர்களை நாம் தினமும் நினைவில் கொள்ள வேண்டும். அவர்களுக்கு நாடு கடன் பட்டுள்ளது.

யுத்தம் என்பது பாரிய அழிவாகும். யுத்தத்தில் போராடிய நீங்கள் யுத்தம் எந்தளவு நாசகரமானது என்பதை அறிந்திருப்பீர்கள். யுத்தம் செய்த எவரும் யுத்தத்தை தொடர்ந்து எதிர் பார்த்து போராடவில்லை. அனைவரும் சமாதானத்தை எதிர்பார்த்தே போராடினர். வடக்கு தெற்கு பேதமின்றி, பெற்றோரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர், கணவரை இழந்த மனைவிமார் உள்ளனர். அவர்கள் கௌரவத்துடன் நினைவுத் தூபியில் தமது உறவினர்களின் பெயர்களைத் தேடுகின்றனர். இங்கு மாத்திரமா, வடக்கிலும் இதே நிலைமை தான். தமது பிள்ளைகள், கணவர்மார்களின் புகைப்ப டத்தை வைத்துக் கொண்டு அவர்களின் உறவினர்கள் வீதியோரம் ஒப்பாரி வைக்கின்றனர்.

அனைத்து பெற்றோருக்கும் தமது பிள்ளை முக்கியம். பாரிய அழிவை சந்தித்த தாய்நாட்டில் அவ்வாறான யுத்தம் மீள ஏற்படுவதை தடுப்பது எமது பொறுப்பாகும். எமது சந்ததி சண்டையிட்டது. கோபமும் குரோதமும் பரவியது. ஆனால், எமது பிள்ளைகள் வாழும் இன்றைய சந்ததினருக்கு யுத்தம் செய்யாத,மோதல் அற்ற, கோபம், சந்தேகத்திற்குப் பதிலாக நட்புறவு மற்றும் அன்புள்ள நாடு உருவாக்கப்பட வேண்டும்.

கடந்த கால சம்பவங்களில் இருந்து பாடம் கற்கவேண்டும். மீள அவ்வாறான நிலை எமது தாய்நாட்டில் ஏற்பட இடமளிக்கக் கூடாது . யுத்தமற்ற, குரோதமோ, சந்தேகமோ அற்ற நாடு உருவாக்கப்பட வேண்டும். மீண்டும் மோதல், குரோதம் உள்ள நாட்டுக்குப் பதிலாக, சமாதானமான நாட்டை உரு வாக்குவதே அவர்களுக்கு நாம் செய்யும் கௌரவமாகும்.- என்றார். (அ)

## இலங்கையின்...

இழந்த உயிர்களையும், சிதறிப்போன குடும்பங்களையும், பேரழிவடைந்த சமூகங்களையும், காணாமல் ஆக்கப்பட்டவர்களாகவே இருப்போரையும் நாம் நினைவு கூருகிறோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவை முன்னிட்டு விடுத்துள்ள அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பொறுப்புக்கூறலுக்கும், உண்மை, நீதி ஆகியவற்றை அடைவதற்கும் எடுக்கப்படும் சுதந்திரமான சர்வதேச முயற்சிகளைக் கனடா தொடர்ந்தும் ஆதரிக்கிறது.

இந்த நினைவேந்தல் நாளை நாம் கடைப்பிடிக்கும்போது, துணிவுடன் அஞ்சலி செலுத்துவதற்கான உறுதிப்பாட்டையும், நீடித்திருக்கும் அமைதிக்காகச் செயற்படுவதற்கான உறுதிப்பாட்டையும் அது பலப்படுத் தட்டும் எனவும் கனடா பிரதமர் தெரிவித்துள்ளார். (அ)

## தேசிய...

யாழ்ப்பாணத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சி அமைப்பு தொடர்பில் பல கட்சிகளுடன் பேசியிருக்கின்றோம். அதற்கு, தமிழ் தேசியத்தை நேசிக்கும் கட்சிகள் ஓரணியில் நின்று, தேசியக் கட்சிக்கு இடங்கொடுக்காத வகையில் ஆட்சி அதிகாரத்தை தமிழ்த் தரப்பினர் கையகப்படுத்தும் வகையில் பங்களிக்கவேண்டும் என்றும் அழைப்பு விடுகின்றேன்.

ஆட்சி செய்வது தொடர்பில் தமிழ் தரப்பிலுள்ள கட்சிகளுடன் பேசியுள்ளேன். அதன்படி, இன்று எமது தேசியப் பரப்பில் இருக்கும் கட்சித் தலைவர்கள் குறிப்பாக, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உள்ளிட்ட ஏனைய தரப்பினரது ஆதரவு கிடைக்கும் என்று நம்புகின்றேன்.

இதேவேளை, ஏனையோர் கூறுவது போன்று, எமது கட்சி எந்தவோர் ஒற்றுமை இணக்கப்பாட்டையும் குழப்பியதும் கிடையாது என்றார்.(அ)

## நல்லூரில்...

எதிரான திடமான எதிர்ப்பை அமைதியான முறையில் வெளிப்படுத்த வேண்டுகிறோம் என ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் நல்லூர் ஆலய முன்றலில் இந்தப் போராட்டத்தை நடத்துவதற்கு சைவ அமைப்புகள் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

## மழை...

பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் பாதிக்கப்பட்டுள்ளது டன், ஜே/06 கிராம சேவகர் பிரிவில் அடிப்படை கட்டமைப்பு ஒன்றும் சேதமடைந்துள்ளது.

இதேநேரம், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/356 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த மூவர் மழையால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

அத்துடன் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/304 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. ஜே/328 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 4 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. மேலும் ஜே/305 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த மூவர் மின்னல் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது-என்றார். (அ)

# விபத்தில் சிக்கிய இளைஞன் மரணம்!

யாழ்ப்பாணம், மே. 20

யாழ்ப்பாணத்தில் விபத்தில் சிக்கிய இளைஞன் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

ஊரெழு கிழக்கு, சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த செல்வராசா அனிஸ்ரன் (வயது 29) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞனும் அவரது நண்பரும் கடந்த 11ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். இதன்போது வீதியில் சென்ற வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டனர். இதன்போது பருத்தித்துறை பக்கத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் காயமடைந்தனர்.

இதன்போது காயமடைந்த நால்வரும் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், மூவர் வீடு திரும்பினர். இருப்பினும் குறித்த இளைஞன் சிகிச்சை பலனின்றி நேற்று காலை உயிரிழந்தார். (அ-05)

## இலங்கையின் ஆட்சியாளர்கள்...

சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அரசாங்கங்களின் இந்த தோல்வி, விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்ட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் உலக நாடுகளின் தண்டனைகளை எதிர்கொள்ளும் நிலையை உருவாக்கியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கங்கள் அரசியல் ரீதியில் இந்த பிரச்னைகளுக்கு தீர்வை காணத் தவறியுள்ளமை குறித்து தனது சீற்றத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

2020 பெப்ரவரியில் தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் எதிராக அமெரிக்கா விதித்த தடைகள் குறித்தும்,மார்ச் மாதம் பிரிட்டன் விதித்த தடைகள் குறித்தும் கருத்து தெரிவித்துள்ள அவர், அமெரிக்கா, பிரிட்டன் தடைகளால் தான் தென்னாசியாவுக்குக்கூட பயணம் செய்ய முடியாத நிலை காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தில் போரிட்ட அதிகாரியின் மகளான யொகானி சில்வாவின் லண்டன் நிகழ்ச்சிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் குறித்து சவேந்திர சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ்,மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண,மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த, மேஜர் ஜெனரல் பிரசன்ன டி சில்வா,சக்கி கலகே உட்பட படைப் பிரிவுகளிற்கு தலைமை வகித்தவர்கள் சர்வதேச சமூ கத்தின் தண்டனை நடவடிக்கைகளை எதிர்கொண்டுள்ளனர் என சவேந்திர சில்வா தெரிவித்தார். (அ)

## சஜித்...

ஆதரவுடன் உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை நிறுவுவதற்கு ஒரு பொதுவான ஒருமித்த கருத்து இதன் போது எட்டப்பட்டதாக அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் இந்தக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் அலு வலகத்தில் நடைபெற்றது. (அ)

## அகதிகளுக்கு...

இலங்கையின் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்பு கொண்டிருந்ததாக, இலங்கைத் தமிழரான மனுதாரர் 2015 இல் கைது செய்யப்பட்டார். தனிநபர் அல்லது அமைப்புகளின் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தும் சட்டத்தின் கீழ் 2018இல் விசாரணை நீதிமன்றத்தால் அந்த நபர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டார். சென்னை உயர் நீதிமன்றம் அவரது சிறைத் தண்டனையை 10 ஆண்டுகளில் இருந்து ஏழு ஆண்டுகளாகக் குறைத்தது. மேலும், அவரது சிறைத் தண்டனை முடிந்தவுடன் நாட்டை விட்டு வெளியேறும்படி கேட்டுக்கொண்டது.

மூன்று வருடங்களாக அகதிகள் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அந்த நபர், இலங்கைக்குத் திரும்பினால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும், எனவே தன்னை இலங்கைக்கு நாடு கடத்துவதைத் தடுத்து நிறுத்தக் கோரியும் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். முறையான விசாவில் தான் இந்தியா வந்ததாகவும், தனது மனைவி மற்றும் குழந்தைகள் இப்போது இந்தியாவில் குடியேறிவிட்டனர் என்றும் தனது மனுவில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தீபங்கர் தத்தா மற்றும் நீதிபதி கே. வினோத் சந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு, "உலகம் முழுவதிலும் இருந்து வரும் அகதிகளை இந்தியா வரவேற்க வேண்டுமா? நாங்கள் 140 கோடியுடன் போராடுகிறோம். இது எல்லா இடங்களிலிருந்தும் வரும் வெளிநாட்டினரை மகிழ்விக்கக்கூடிய தர்மசாலை அல்ல. இங்கே குடியேற உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? இலங்கையில் உங்களது உயிருக்கு ஆபத்து இருந்தால் வேறு நாட்டுக்குச் செல்லுங்கள்." எனக் கூறி மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. (அ)

## இலங்கையில்...

இரத்தக் களரியாலும் பாதிக்கப்பட்டது, ஏற்கனவே பல வருடங்களாக துயரங்களை அனுபவித்த நிலையில் 2009 மே மாதம் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டமை, தனித்துவமான பயங்கரம் மற்றும் ஈவிரக்கமற்ற தன்மை ஆகியவற்றின் தருணமாகும்.

இது வெறுமனே படுகொலையில்லை. இது இனஅழிப்பு.

16 வருடங்களுக்கு பின்னர் பாதிக்கப்பட்டவர்களை நாங்கள் நினைவு கூருகின்றோம், நீதிக்கான அவசர தேவையை அங்கீகரிக்கின்றோம்.

ராஜபக்ஷ அரசாங்கத்தின் யுத்தக் குற்றங்களை ஒருபோதும் மறக்கக்கூடாது. அந்த குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தண்டனையின்றி தப்ப அனும திக்கக் கூடாது.

கனடா வலுவான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும், பொறுப்புக்கூறலை கோரவேண்டும். கனடா யுத்தக் குற்றவாளிகளுக்கான புகலிடமாக ஒருபோதும் விளங்கக் கூடாது.

தமிழ் இனப்படுகொலைக்கு காரணமானவர்கள் உண்மையான விளைவுகளை அனுபவிப்பதை உறுதி செய்வதற்கு கொன்சவேர்ட்டிவ் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கும்.

கனடாவில் உள்ள தமிழ் சமூகம் நம்பமுடியாத மீள் எழுச்சித்தன்மையை வெளிப்படுத்தியுள்ளது, வேதனையை வலிமையாக மாற்றியுள்ளது,எங்கள் நாட்டை வளப்படுத்தியுள்ளது.

இந்த இனப்படுகொலையில் பாதிக்கப்பட்டவர்களை நாங்கள் நினைவு கூரும் இந்த தருணத்தில், அனைவருக்கும் நீதி மற்றும் சமாதானத்துக்கான எங்கள் அர்ப்பணிப்பை மீளவலியுறுத்துகின்றோம்.

எங்கள் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் ராஜபக்ஷ அரசாங்கத்தை எதிர்த்து நின்றார் என்பது குறித்து நான் பெருமிதம் அடைகின்றேன்.

நான், ராஜபக்ஷ அரசாங்கம் தங்கள் குற்றங்களுக்காக பதில் கூறுவதை உறுதி செய்வதற்காக தொடர்ந்தும் போராடுவேன், சர்வதேச நீதிமன்றத்தில் அவர்களை பாரப்படுத்தும் நடவடிக்கைகளை எடுப்பேன் - என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu

## மகிந்தானந்தவுக்கு விளக்கமறியல்!

கொழும்பு, மே. 20

முன்னாள் விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்க மகேவை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன் றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த அரசாங்கத்தின்போது சீன நிறுவனமொன்றிடமிருந்து தரமற்ற கரிம உரத்தை நாட்டுக்கு இறக்குமதி செய்த சம்பவம் தொடர்பில் அவரை கைது செய்வதற்காக நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்த நிலையில், நேற்றைய தினம் அவர் கொழும்பு பிரதான நீதவான் நீதி மன்றில் முன்னிலையானதையடுத்து, அவரை மே 26 வரை விளக்கமறியிலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

(அ)

# தொடர்ந்தும் நீதிக்காக - அமைதிக்காக பொறுப்புக்கூறலுக்காக போராடுவோம்

### பிரிட்டன் எம்.பி உமா குமரன் கருத்து



லண்டன், மே. 20

**முள்ளிவாய்க்காலில் துன்புற்ற அனைவருக்குமாக நாங்கள் தொடர்ந்தும் நீதிக்காக - அமைதிக்காக - பொறுப்புக்கூறலுக்காக போராடுவோம் என பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன் தெரிவித்துள்ளார். முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை நினைவு செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.**

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

16 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இன்னமும் நீதி நிலை நாட்டப்படவில்லை.

காயமும் மன அதிர்ச்சியும் எங்களின் கூட்டு நினைவு களில் ஆழமாக உணரப்படுகின்றது.

தமிழ் பாரம்பரியத்தை உடைய பிரித்தானியாவின் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில், பிரித்தானிய சமூகத்திற்கான எனது பங்களிப்பு குறித்த பெருமிதத்தை மாத்திரம் நான் சுமக்கவில்லை.

உண்மைக்காக - பொறுப்புக்கூறலுக்காக - மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்கவேண்டிய பொறுப்பையும் நான் சுமக்கின்றேன்.

இலங்கையில் நிரந்தர அமைதி, சமாதானம், நல்லிணக்கத்துக்காக நாங்கள் தொடர்ந்தும் பாடுபட வேண்டும்.

பிரித்தானியாவில் தொழில்கட்சி அரசாங்கம் நீதியை நிலைநாட்டுவதை நோக்கி குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது - என்று கூறியுள்ளார். (அ)

# இறந்த உறவுகளை ஒன்றாக நினைவு கூரும் எதிர்காலத்தை நோக்கி பயணிக்கவேண்டும்

### மனோ கணேசன் எம்.பி. கருத்து

கொழும்பு, மே. 20

இலங்கையின் அனைத்து மக்களும் இறந்த தம் அனைத்து உறவுகளையும் ஒன்றாக ஒரே நேரத்தில் இலங்கையர்களாக நினைவு கூரும் ஒரு எதிர்காலத்தை நோக்கி நம் நாடு பயணிக்கவேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-இலங்கை சமூகத்தில் சமூகத்தில் மரணித்து போன உறவுகள், இன்று முள்ளிவாய்க்காலிலும், தெற்கிலும் நினைவு கூரப்படுகிறார்கள்.

தெற்கில் இராணுவ வெற்றி விழா நடத்தபடுகிறது. நினைவு கூரலும், வெற்றி விழாவும் ஒருசேர நடத்தலாம். அந்த நாள் வரவேண்டும்.

ஆனால் அந்த இலக்கை, 30 வருட காலம் யுத்தம் நிகழ்ந்தமைகான மூல காரணங்களை தேடி அறிந்து அவற்றுக்கு தீர்வு தேடாமல் அடைய முடியாது.

1948 ஆம் வருட குடியுரிமை-வாக்குரிமை பறிப்பு சட்டங்கள், சிங்களம் மட்டும் சட்டம், பண்டா-செல்வா மற்றும் டட்லி-செல்வா ஒப்பந்தங்கள் மற்றும் சந்திரிக்காவின் 2000ஆம் வருட தீர்வு திட்டம் ஆகியவை அகௌரவமான முறைகளில் உதாசீனப்படுத்தப்பட்டமை, 13ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படாமை, பல இனங்கள், மதங்கள், மொழிகள் கொண்ட இலங்கையின் பன்முகத்தன்மை அங்கீகரிக்கபடாமை, கற்றுகொண்ட பாடங்கள் ஆணைக்குழுவின் சிபாரிசுகள் அமுல் செய்யப்படாமை, யுத்தத்தின் பின் மகிந்த-பான்கி-மூன் வெளியிட்ட கூட்டறிக்கை அலட்சியப்படுத்தப்பட்டமை ஆகிய தவறுகளை திருத்தி முன் நகர முடியாவிட்டால் எமது நாட்டின் தேசிய பயணம் நின்ற அதே இடத்திலேயே நிற்கும்- எனப் பதிவிட்டுள்ளார். (அ)

## போர்வீரர் தினத்தையொட்டி அதிகாரிகளுக்கு பதவி உயர்வு

கொழும்பு, மே. 20

16ஆவது தேசிய போர்வீரர் தினத்தை முன்னிட்டு, முப்படைகளின் அதிகாரிகள் மற்றும் பிற அணிகளுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, இலங்கை கடற்படையின் 22 அதிகாரிகள் மற்றும் 1,256 பிற அணிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

மேலதிகமாக, இலங்கை விமானப்படையின் 12 அதிகாரிகள் மற்றும் 848 பிற அணிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை விமானப் படை தெரிவித்துள்ளது.

16ஆவது தேசிய போர்வீரர் தினத்தை முன்னிட்டு, இலங்கை இராணுவத்தின் 10,093 பிற அணிகளுக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது. (அ)

## பல மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, மே. 20

நிலவும் மழையுடனான வானிலை காரணமாக பல மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு மாவட்டத்தில் சீதாவக்க, காலி மாவட்டத்தில் எல்பிட்டிய, களுத்துறை மாவட்டத்தில் பாலிந்தநுவர மற்றும் இங்கிரிய, கண்டி மாவட்டத்தில் பஸ்பாகே கோரளை, கேகாலை மாவட்டத்தில் புலத்கொ/ஹபிட்டிய, ருவன்வெல்ல, தெஹியோவிட்ட மற்றும் வரகாபொல, இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிட்ட , கிரியெல்ல, எஹெலியகொட , நிவித்திகல, கலவான மற்றும் இரத்தினபுரி , ஆகிய பகுதிகளுக்கே மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# நாகை-காங்கேசன் கப்பலில் பயணிப்போர் 22 கிலோ பொதியை எடுத்துச் செல்லலாம்!

சென்னை, மே. 20

நாகை-காங்கேசன் பயணிகள் கப்பல் சேவையில், மேலதிக பயணப்பொதியை எடுத்துச்செல்ல இந்திய மத்திய அரசும் தமிழக அரசும் அனுமதியளித்துள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாகப்பட்டினம்- காங்கேசன்துறை இடையே சுபம் நிறுவனத்தினர் சிவகங்கை என்ற பெயரில் கப்பல் போக்குவரத்தை தொடங்கி. 100ஆவது நாளை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட கப்பலில் பயணித்த 85 இரு நாட்டு பயணிகளுக்கும் இனிப்பு வழங்கினர். இதை தொடர்ந்து கொடியசைத்து வைத்து சிவகங்கை கப்பலை வழியனுப்பி வைத்தனர்.

விமான கட்டணத்தை விட கப்பல் கட்டணம் குறைவாக இருப்பதால் கப்பலில் பயணம் செய்யும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அதே வேளை ஏற்கனவே பயணிகள் 10 கிலோ வரை பயணப் பொதியை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது.

தற்போது 22 கிலோ வரை மேலதிகமாக பயணப் பொதியை எடுத்துச் செல்ல சுற்றுலா பயணிகளுக்கு இந்திய மத்திய அரசு மற்றும், தமிழக அரசும் அனுமதி அளித்துள்ளன. (அ)

# முள்ளிவாய்க்கால் நினைவாக லண்டனில் தமிழர் போராட்டம்



லண்டன், மே. 20

முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தப் பேரவலம் இடம்பெற்று 16 ஆண்டுகள் நிறைவுற்றிருக்கும் நிலையில், பிரித்தானியா - லண்டன் பாராளுமன்ற சுற்றுவட்டப் பகுதியில் கண்டன ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான பிரித்தானிய வாழ் தமிழ் மக்கள் பங்கேற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில், இறுதி யுத்தத்தின்போது நிகழ்த்தப்பட்ட போர் குற்றங்களையும், துன்புறுத்தல்களையும் கண்டித்தும், சர்வதேச விசாரணையைக் கோரியும் கோஷங்கள் எழுப்பப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்போது பிரித்தானிய பிரதமர் அலுவலகத்தில் கோரிக்கை மனு ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## பதில் சுகாதார அமைச்சராக ஹன்சக விஜேமுனி நியமனம்



கொழும்பு, மே. 20

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் ஹன்சக விஜேமுனி பதில் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் நடைபெறும் உலக சுகாதார அமைப்பின் 78ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சுவிட்சர்லாந்து சென்றுள்ளதால் அவர் நாடு திரும்பும் வரை செயலாற் றுவதற்காக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.